மலர்: 02 இதழ்: 12 அக்டோபர் 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.:
TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்

www.penakural.com

Scan and visit the website

## "தாயின் பெயரில் ஒரு மரக்கன்று"

### இயக்கத்தின் கீழ் காடு வளர்ப்பில் நாடு தழுவிய வெற்றி







## "இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும்!"

- துணை முதலமைச்சர் உதயநிதி

# Subzero Cool Tech

## AC REPAIR SERVICE & RENT

**AT YOUR DOOR STEP**

- AC REPAIR
- INSTALLATION
- MAINTENANCE
- AMC SERVICE

**We Repair all Brands**



- Uninstallation
- Gas Filling
- Air Duct Cleaning

HIGH QUALITY PREMIUM OPERATIONAL SERVICE

CONTACT US

Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.

SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# பேனா குரல்

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 02 இதழ்: 12 அக்டோபர் 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : **N V சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

கௌரவ ஆசிரியர் : **K.ராமசுப்ரமணியன்**

இணை ஆசிரியர் : **K.ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:

**துரை. சந்துரு, ந.மதிவாணன், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:

**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், K.மாரிதுரை, A.தங்கராஜ்**

நிருபர்கள்:

**Ba.சரவணன், K.கலைமணி, D.பாமா, அன்புமணி, S.பிரகாசம், இளைய தர்ஷினி, P.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், K.சுபுலட்சுமி, S.ஜெயராஜ்**

புகைப்பட நிருபர்கள்:

**V.கவியரசன், K.மிதுன் சாய்**

சட்ட ஆலோசகர்கள்:

**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:

*Tamilni Printz & Graphics* - 8754582123



நிர்வாக அலுவலகம்:

**பேனா குரல்**
**3/885, பிள்ளையார் கோவில் தெரு, மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை, தமிழ் நாடு, இந்தியா - 600097.**

தொடர்புக்கு:

**044-35906002, 9962245338**
**info@penakural.com**
**news@penakural.com**
**www.penakural.com**



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. ✻




*ஆசிரியர் குரல்*

# வியந்து போற்றப்படும் உன்னத மனிதர்!

ஒட்டுமொத்த இந்தியாவும் ரத்தன் டாடா மறைவுக்காக மனதிற்குள் கண்ணீர் அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறது. தொழிலதிபர்களை கார்ப்பரேட்டுகள், முதலாளித்துவப் பிரதி-நிதிகள், தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி உல்லாச வாழ்க்கை வாழ்பவர்கள் என்றெல்லாம் வர்ணிப்பவர்களும்கூட, ரத்தன் டாடா என்று சொல்லும்போது தனி மரியாதையுடன் தலைவணங்குகிறார்கள் என்றால், அந்த மனிதர் எத்தகையவர் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

தன்னை எப்போதுமே முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதேகூட, அவரை மற்றவர்கள் வியந்து, அண்ணாந்து பார்ப்பதற்குக் காரணமாக இருக்கக் கூடும். இன்று உலக அரங்கில் இந்தியா பொருளாதார ரீதியாக வலிமை பெற்றதற்கும், சர்வதேச அளவில் நமது நிறுவனங்கள் செயல்படுவதற்கும் பாதையிட்டுக் கொடுத்த பெருமகன் ரத்தன் டாடா என்று வரலாறு பதிவு செய்யும்.

16,500 கோடி டாலர் மதிப்புள்ள டாடா குழுமம், 1991-இல் ரத்தன் டாடா பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, அதன் இயக்க வருவாய் (டர்ன் ஓவர்) ஆண்டொன்றுக்கு வெறும் 400 கோடி டாலர்கள்தான். அவர் 2012-இல் பணி ஓய்வு பெறும்போது ஆண்டொன்றுக்கு 10,000 கோடி டாலர் இயக்க வருவாயைக் கடந்த முதல் இந்திய கார்ப்பரேட் நிறுவனமாக டாடா குழுமம் உயர்ந்திருந்தது. டாடா குழுமத்தில் லாபகரமாக செயல்படாத சிமெண்ட், ஜவுளி, மருந்து தயாரிப்பு, அழகு சாதனப் பொருள் ஆகியவற்றை துணிந்து ஒன்றன் பின் ஒன்றாகக் கைகழுவி, மென்பொருள், இரும்பு, எஃகு, தகவல் தொழில்நுட்பம், மகிழுந்து, காப்பீடு, சில்லறை விற்பனைச் சங்கிலி, விமானப் போக்குவரத்து என்று விரிவுபடுத்தியது அவரது தொலைநோக்குப் பார்வை.

அதுவரையில் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களை விலைபேசிக் கொண்டிருந்ததுபோய், இந்திய நிறுவனம் ஒன்று மேலைநாட்டு நிறுவனங்களின் பங்குகளை வாங்கிக் கையகப்படுத்திய பெருமைக்கு வித்திட்டவர் ரத்தன் டாடா. அவர் டாடா குழுமத்தின் தலைவராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து, 43.20 கோடி டாலர் முதலீட்டில் 'டெட்லி' டீ நிறுவனத்தை டாடா நிறுவனம் பிப்ரவரி 2000-இல் தனதாக்கிக் கொண்டதுதான் இந்திய குழுமம் ஒன்றின் முதலாவது பன்னாட்டு விரிவாக்கம். அது டாடா குழுமத்தின் முதலாவது பன்னாட்டு விரிவாக்கம் மட்டுமே. தகவல் தொழில்நுட்பத் துறையிலும், கணினி மென்பொருள் துறையிலும், ஆட்டோமொபைல் துறையிலும் இன்று டாடா நிறுவனம் முன்னணியில் இருப்பதற்கு ரத்தன் டாடாவின் தொலைநோக்குப் பார்வைதான் காரணம். தான் மட்டும் வளராமல் இளம் தொழில்முனைவோர்கள் பெருக வேண்டும், கார்ப்பரேட் நிறுவனங்களாக உயர வேண்டும் என்கிற அவரது பெருந்தன்மையை பல இளைஞர்கள் வியந்து போற்றுகிறார்கள்.

— ஆசிரியர்

# “டிஎன்பிஎஸ்சி குரூப் 4 காலி பணியிடங்களை 15 ஆயிரமாக உயர்த்துங்கள்”: அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்!



பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் அரசுப் பணியாளர் தேர்வாணையம் அண்மையில் நடத்திய குரூப் 4 பணிகளுக்கான போட்டித் தேர்வுகளின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை 15 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று தேர்வர்கள் வலியுறுத்தி வரும் நிலையில், காலியிடங்களின் எண்ணிக்கையை வெறும் 2,208 மட்டுமே உயர்த்தி டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு வெளியிட்டிருப்பது ஏமாற்றமளிக்கிறது.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் விஷயத்தில் தமிழக அரசு காட்டும் அக்கறையின்மை கண்டிக்கத்தக்கது. குரூப் 4 பணியிடங்களின் எண்ணிக்கையை இதற்கு மேலும் அதிகரிக்க முடியாது. இதுவே மிகவும் அதிகம் என்ற தொனியில் டிஎன்பிஎஸ்சி அளித்துள்ள விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாதது. “2022-ல் நடைபெற்ற தொகுதி 4 தேர்வின் மூலம் 2001-21, 2021-22, 2022-23, ஆகிய மூன்று நிதியாண்டுகளுக்கு 10,139 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

அதாவது ஆண்டுக்கு 3,380 பணியிடங்கள் வீதம் நிரப்பப்பட்டன. ஆனால், இப்போது நடத்தப்பட்ட தேர்வுகளின் மூலம் 2023-24, 2024-25 ஆகிய இரண்டு நிதி ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு 4,466 வீதம் 8,932 பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதன் மூலம் ஆண்டுக்கு 1,086 பணியிடங்கள் கூடுதலாக நிரப்பப்படவுள்ளன” என்று டிஎன்பிஎஸ்சி கூறுவது தேர்வர்களை இழிவுபடுத்தும் செயலாகும்.

தமிழ்நாட்டில் இன்றைய சூழலில் நான்கரை லட்சம் அரசுப் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு, அதாவது ஒன்றரை லட்சம் இடங்கள் குரூப் 4 பணிகள் ஆகும். அதுமட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குரூப் 4 பணியாளர்கள் ஓய்வு பெறுகின்றனர். அவ்வாறு இருக்கும் போது ஆண்டுக்கு 4,466 குரூப் 4 பணியாளர்களை தேர்ந்தெடுப்பதை சாதனையாக தமிழக அரசும், தேர்வாணையமும் கூறிவருவது நியாயமல்ல. தமிழக அரசின் இத்தகைய அணுகுமுறை தொடர்ந்தால், ஒரு கட்டத்தில் அரசு நிர்வாகமே முடங்கிவிடும்.

அரசு நிர்வாகத்தைப் பொறுத்தவரை குரூப் 4 பணியாளர்கள் தான் பெரும்பாலும் மக்களுக்கு நேரடியாக பணி செய்பவர்கள். அவர்களின் எண்ணிக்கை குறைந்தால் மக்களுக்கு வழங்கப்படும் அரசு சேவைகள் பாதிக்கப்படும். அரசுத்துறைகளில் இப்போது காலியாக உள்ள குரூப் 4 பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்றால் ஆண்டுக்கு குறைந்தது 50 ஆயிரம் பேராவது தேர்வு செய்யப்பட வேண்டும்.

அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், இளைஞர்களின் நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அண்மையில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை குறைந்தபட்சம் 15 ஆயிரமாக அதிகரிக்க தமிழக அரசும், அரசுப் பணியாளர் தேர்வாணையமும் முன்வர வேண்டும்“ எனத் தெரிவித்துள்ளார்.

**- துரை. சந்துரு**

# “தாயின் பெயரில் ஒரு மரக்கன்று”

## இயக்கத்தின் கீழ் காடு வளர்ப்பில் நாடு தழுவிய வெற்றி



உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, புதுதில்லியில் உள்ள புத்த ஜெயந்தி பூங்காவில் அரச மரக்கன்றை நட்டு, மாற்றத்தை ஏற்படுத்தும் இயக்கத்தை பிரதமர் தொடங்கி வைத்தார். மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தால் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சி, செப்டம்பர் 2024-க்குள் 80 கோடி மரங்களையும், மார்ச் 2025-க்குள் 140 கோடி மரங்களையும் நடவு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த இயக்கம் “ஒட்டுமொத்த அரசு” மற்றும் “ஒட்டுமொத்த சமூகம்“ அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. இந்தியாவின் பசுமைப் போர்வையை மீட்டெடுப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியில் மக்கள், சமூகங்கள் மற்றும் உள்ளூர் நிர்வாகங்களை ஈடுபடுத்துகிறது. இந்த இயக்கத்திற்கு பெரும் வரவேற்பு காணப்படுகிறது. பல மாநிலங்கள் தங்கள் மரம் நடும் இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பே எட்டிவிட்டன.

அருணாச்சலப் பிரதேசம் (1.74 கோடி), அசாம் (3.17 கோடி), சத்தீஸ்கர் (2.04 கோடி), குஜராத் (15.5 கோடி), கோவா (5.4 லட்சம்), ஹரியானா (12.20 கோடி), ராஜஸ்தான் (5.5 கோடி), மத்தியப் பிரதேசம் (4.41 கோடி), பஞ்சாப் (94 லட்சம்), நாகாலாந்து (34.6 லட்சம்), ஒடிசா (4.3 கோடி), தெலுங்கானா (8.34 கோடி) மற்றும் உத்தரபிரதேசம் (26.5 கோடி) ஆகியவை வலுவான சமூக பங்களிப்புடன் செப்டம்பர் 2024 க்கான இலக்குகளை தாண்டியுள்ளன. மேலும், பீகார் (1.46 கோடி), கேரளா (11.8 லட்சம்), மகாராஷ்டிரா (1.78 கோடி), சிக்கிம் (12 லட்சம்) மற்றும் உத்தரகண்ட் (82 லட்சம்) மாநிலங்கள் பிரச்சாரத்தின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன.

மேலும், ஜம்மு-காஷ்மீர், லடாக், பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் பருவமழை காலத்தை கருத்தில் கொண்டு மரக்கன்றுகள் நடும் பணிகளை மேற்கொள்ள தயாராகி வருகின்றன.

சமூக ஈடுபாடு மற்றும் அரசாங்க ஒத்துழைப்புக்கு வலுவான முக்கியத்துவத்துடன், இந்த முயற்சி தாய்மார்களை கௌரவிப்பதோடு மட்டுமல்லாமல், வரும் தலைமுறைகளுக்கு பசுமையான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- N V சிவசங்கர்

# 21-வது ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரை

மதிப்பிற்குரிய தலைவர்களே,

உங்கள் மதிப்புமிக்க ஆலோசனைகளுக்கு நன்றி. இந்தியா - ஆசியான் இடையேயான விரிவான உத்திசார் ஒத்துழைப்பை வலுப்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். நலன், பிராந்திய அமைதி, நிலைத்தன்மை, வளம் ஆகியவற்றுக்காக நாம் தொடர்ந்து பாடுபடுவோம்.

நேரடித் தொடர்பை மட்டுமின்றி, பொருளாதார, டிஜிட்டல், கலாச்சார, ஆன்மீக உறவுகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து எடுப்போம்.

நண்பர்களே,

இந்த ஆண்டு ஆசியான் உச்சி மாநாட்டின் மையக்கருத்தான "இணைப்பை மேம்படுத்துதல்" என்ற பின்னணியில் நான் சில எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்று பத்தாவது மாதத்தின் பத்தாவது நாள். எனவே பத்து ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, நம்மிடையே சுற்றுலாவை மேம்படுத்த, 2025-ம் ஆண்டை "ஆசியான் - இந்தியா சுற்றுலா ஆண்டாக" அறிவிக்கலாம். இதற்காக இந்தியா 5 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்க உள்ளது.

இரண்டாவதாக, இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையின் பத்தாண்டுகளை நினைவுகூரும் வகையில், இந்தியாவுக்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையே பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நாம் ஏற்பாடு செய்யலாம். நமது கலைஞர்கள், இளைஞர்கள்,



தொழில்முனைவோர், சிந்தனையாளர்கள் ஆகியோரை இணைப்பதன் மூலம், இசை விழா, இளைஞர் உச்சி மாநாடு, ஹேக்கத்தான், ஸ்டார்ட்-அப் விழா போன்ற முயற்சிகளை இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சேர்க்க முடியும்.

மூன்றாவதாக, "இந்தியா-ஆசியான் அறிவியல் - தொழில்நுட்ப நிதியத்தின்" கீழ், நாம் ஆண்டுதோறும் பெண் விஞ்ஞானிகள் மாநாட்டை நடத்தலாம்.

நான்காவதாக, புதிதாக நிறுவப்பட்டுள்ள நாளந்தா பல்கலைக்கழகத்தில் ஆசியான் நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான முதுநிலை கல்வி உதவித்தொகை இரண்டு மடங்கு அதிகரிக்கப்படும். கூடுதலாக, இந்தியாவின் வேளாண் பல்கலைக்கழகங்களில் ஆசியான் மாணவர்களுக்கான புதிய உதவித்தொகை திட்டமும் இந்த ஆண்டு முதல் தொடங்கப்படும்.

ஐந்தாவதாக, "ஆசியான்-இந்தியா சரக்கு வர்த்தக ஒப்பந்தத்தின்" பணிகள் 2025-ம் ஆண்டுக்குள் முடிக்கப்பட வேண்டும்.




இது நமது பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும். அத்துடன் பாதுகாப்பான, நம்பகமான விநியோகச் சங்கிலியை உருவாக்க உதவும்.

ஆறாவதாக, பேரிடர் தடுப்புக்காக, "ஆசியான்-இந்தியா நிதியத்திலிருந்து" 5 மில்லியன் அமெரிக்க டாலர் ஒதுக்கப்படும். இந்தியாவின் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமும், ஆசியான் மனிதாபிமான உதவி மையமும் இந்த விஷயத்தில் இணைந்து செயல்பட முடியும்.

ஏழாவதாக, சுகாதாரத் திறனை உறுதி செய்ய, ஆசியான் - இந்தியா சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தை நிறுவனமயமாக்கலாம். மேலும், இந்தியாவின் வருடாந்திர தேசிய புற்றுநோய் தொகுப்பு 'விஸ்வம் மாநாட்டில்' கலந்து கொள்ள ஒவ்வொரு ஆசியான் நாட்டிலிருந்தும் இரண்டு நிபுணர்களை நாங்கள் அழைக்கிறோம்.

எட்டாவதாக, டிஜிட்டல் - இணையதள திறனுக்காக, இந்தியா - ஆசியான் இடையே இணைய கொள்கை பேச்சுவார்த்தை நிறுவனமயமாக்கப்படலாம்.

ஒன்பதாவதாக, பசுமை எதிர்காலத்தை ஊக்குவிக்க, இந்தியா - ஆசியான் நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய பசுமை ஹைட்ரஜன் குறித்த பயிலரங்குகளை ஏற்பாடு செய்ய நான் முன்மொழிகிறேன்.

பத்தாவதாக, பருவநிலை மீள்திறனுக்காக, அன்னையின் பெயரில் ஒரு மரக்கன்று நடுதல் என்ற எங்கள் இயக்கத்தில் சேருமாறு உங்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது பத்து யோசனைகளுக்கு உங்கள் ஆதரவு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அவற்றை செயல்படுத்த எங்கள் குழுக்கள் ஒத்துழைக்கும்.

மிக்க நன்றி.

பொறுப்புத் துறப்பு - இது பிரதமரின் கருத்துக்களின் தோராயமான மொழிபெயர்ப்பு ஆகும். பிரதமர் தமது உரையை இந்தியில் வழங்கி இருந்தார்.

- ந.மதிவாணன்

# பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் என்ற பதாகையின் கீழ் நாடு முழுவதும் சர்வதேசப் பெண் குழந்தைகள் தினம் 10 நாட்கள் கொண்டாடப்பட்டது





சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தையொட்டி அக்டோபர் 2 முதல் 11 வரை 10 நாள் நாடு தழுவிய கொண்டாட்டத்திற்கு மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அழைப்பு விடுத்திருந்தது. பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் என்ற பதாகையின் கீழ் அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் 10 நாள் சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன.

நாடு முழுவதும், சிறுமிகளின் உரிமைகள் பற்றிய விவாதங்கள், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய புரிதலை மேம்படுத்துதல், அவர்களின் கல்வி மற்றும் அதிகாரமளித்தலை ஆதரிக்கும் முயற்சிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் சமூகங்கள் மற்றும் பங்குதாரர்களை மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் ஈடுபடுத்தின. மரக்கன்றுகள் நடும் இயக்கங்கள், பள்ளி செல்லும் திறமையான சிறுமிகளை கௌரவித்தல், “மகள்களுடன் செல்ஃபி” இயக்கங்கள், கன்னி பூஜை விழாக்கள், சுகாதார முகாம்கள், கருத்தரங்குகள், விளையாட்டு நிகழ்வுகள், சிறுமிகளிடையே சுறுசுறுப்பான பங்கேற்பு மற்றும் படைப்பாற்றலை ஊக்குவித்தல் ஆகியவை செயல்பாடுகளில் அடங்கும்.

சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தையொட்டி கருத்து தெரிவித்த மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, “நமது பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிப்பது ஒரு பொறுப்பு மட்டுமல்ல; இது பிரகாசமான எதிர்காலத்திற்கான நமது பார்வை. அவர்களின் உரிமைகள் மற்றும் திறனை அங்கீகரிப்பதன் மூலம், ஒவ்வொரு பெண்ணும் செழித்து வளரும் ஒரு சமத்துவ சமூகத்திற்கு வழி வகுக்க முடியும்“ என்றார்.

- A.தங்கராஜ்

# நிலுவையில் உள்ள வழக்குகளைத் தீர்த்தல் மற்றும் அலுவலகத் தூய்மைக்கான சிறப்பு இயக்கம் 4.0-ஐ நீதித்துறை நடத்தியது



நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை வழிகாட்டுதலின் கீழ், நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைக்கவும், அலுவலக வளாகத்தை தூய்மைப்படுத்துவதில் கவனம் செலுத்தவும் சிறப்பு இயக்கம் 4.0-ஐ நீதித்துறை செயல்படுத்தியது. புதுதில்லியில் ஜெய்சால்மர் இல்லத்தில் அமைந்துள்ள அதன் அலுவலக வளாகத்தைத் தவிர, போபாலில் உள்ள தேசிய நீதித்துறை அகாடமி, புதுதில்லியில் உள்ள இந்திய தேசிய சட்ட சேவைகள் ஆணையம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களையும் தூய்மை இயக்கத்தின் தீவிர பங்கேற்பாளர்களாக இத்துறை ஈடுபடுத்தியது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும், இந்த இயக்கம் இரண்டு கட்டங்களாக பரவியுள்ளது. 02/10/2024 முதல் 31/10/2024 வரையிலான இரண்டாம் கட்டம் அடையாளம் காணப்பட்ட நிலுவையில் உள்ள கோப்புகளைக் குறைத்தல், அடையாளம் காணப்பட்ட தளங்கள் / பகுதிகளை சுத்தம் செய்தல் / அழகுபடுத்துதல் ஆகியவற்றிற்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

அண்மையில் முடிவடைந்த முதலாம் கட்டத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து 03 விண்ணப்பங்கள் மற்றும் 281 பொதுமக்கள் குறைகள் தீர்க்கப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டன, 272 நேரடி கோப்புகள் களையெடுப்பதற்காக ஒதுக்கப்பட்டன மற்றும் 138 மின்-கோப்புகள் மூடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. இது தவிர, 6 நாடாளுமன்ற உத்தரவாதங்கள், மாநில அரசுகளிடமிருந்து 1 குறிப்பு, அமைச்சகங்களுக்கு இடையிலான 1 குறிப்பு ஆகியவையும் தீர்வு காண அடையாளம் காணப்பட்டன.

2.10.2024 முதல் 31.10.2024 வரை நடைபெறும் சிறப்பு முகாமின் செயலாக்க கட்டத்தைப் பொறுத்தவரை, 10.10.2024 வரை 281 பொது மக்கள் குறைகளில் 188 குறைகளுக்கும், 3 நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து 2 குறிப்புகளும், 272 கோப்புகளில் 70 கோப்புகளும், 6 நாடாளுமன்ற உறுதிமொழிகளில் 3 நாடாளுமன்ற உறுதிமொழிகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளன.

சிறப்பு இயக்கம் 4.0-ன் இரண்டாம் கட்டத்தில், முதல் கட்டத்தில் அடையாளம் காணப்பட்டவாறு, நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைக்கவும் இடங்களை மேம்படுத்தவும் துறை உறுதிபூண்டுள்ளது.


- B.நவின்குமார்,

# தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் அக்.29-ல் தொடக்கம்; நவ.9, 10, 23, 24-ல் சிறப்பு முகாம்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் வரும் அக்,29-ம் தேதி தொடங்கும் நிலையில், நவ.9,10 மற்றும் 23,24 ஆகிய நான்கு நாட்களும் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

அடுத்தாண்டு ஜனவரி 1ம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, வரும் ஆக.20 முதல் அக்.18ம் தேதிவரை, வீடுவீடாக சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறு சீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல் உள்ளிட்ட பணிகள் நடைபெறுகின்றன.

தொடர்ந்து, வரும் அக்.29ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, அன்றிலிருந்து நவ 28ம் தேதி வரை, பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும். விண்ணப்பங்கள் வரும் டிச.24-ம் தேதிக்குள் பரிசீலிக்கப்பட்டு, 2025ம் ஆண்டு ஜனவரி 6-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். எனவே, அக்.29 முதல் நவ.28-ம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர், தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வழங்கலாம்.



அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர், வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். மேலும், https://voters.eci.gov.in/, ஆகிய இணையதள முகவரி மற்றும் ‘வாக்காளர் உதவி கைபேசி செயலி (VOTER HELPLINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் நடைபெறும் அக்.29ம் தேதி முதல் நவ.28ம் தேதி வரையிலான காலகட்டத்தில், பொதுமக்கள் வசதிக்காக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. அந்த வகையில், நவ.9,10 மற்றும் 23,24 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழகத்தில் உள்ள 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான சிறப்பு முகாம் நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ அறிவித்துள்ளார்.

இக்காலகட்டத்தில், பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்தல், முகவரி மாற்றம் போன்றவற்றுக்கான மனுக்களை பெற்று உரிய சான்றுகளுடன் விண்ணப்பிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

- Ba.சரவணன்

# சிறப்பாக செயல்பட்ட 5 காவல்துறை பணியாளர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது அறிவிப்பு

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட ஐந்து காவல்துறை பணியாளர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது முதலமைச்சர் அவர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக

1. சின்னகாமணன், காவல் ஆய்வாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு விழுப்புரம் மண்டலம்,
2. மகாமார்க்ஸ், தலைமை காவலர்-1989, விழுப்புரம் தாலுகா சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம்,
3. கார்த்திக், தலைமை காவலர்-2963. துறையூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, திருச்சி மாவட்டம்,
4. சிவா, இரண்டாம் நிலை காவலர்-1443, ஆயுதப்படை, சேலம் மாவட்டம்
5. பூமாலை, இரண்டாம் நிலை காவலர் 764, ஆயுதப்படை, சேலம் மாவட்டம்

ஆகியோருக்கு 2024-ம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க



உத்தரவிட்டுள்ளார்கள். இவ்விருது, முதலமைச்சர் அவர்களால் 2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாள் குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40.000/- ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- P.**அசோக்குமார்**




ஊர்க்காவல் படையினருக்கு (Home Guards) விரிவுப்படுத்தப்பட்டுள்ள காவலர் பல்பொருள் அங்காடியில் பொருட்கள் வழங்கும் திட்டத்தை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் துவக்கி வைத்து காவலர் பல்பொருள் அங்காடி அடையாள அட்டைகளை வழங்கினார்.

# செஸ் விளையாட்டில் கோலோச்சும் இந்தியா; சாம்பியன்களின் தலைநகராகும் தமிழ்நாடு!




பொற்காலம் என்போமே... அப்படியொரு காலத்தில்தான் இந்திய சதுரங்கம் கம்பீரமாகக் கால் பதித்திருக்கிறது.

45-வது செஸ் ஒலிம்பியாடில் இந்தியா பொதுப்பிரிவு மற்றும் பெண்களுக்கான பிரிவு என இரண்டிலுமே வென்று வந்திருக்கிறது...

இரண்டு தங்கப் பதக்கங்களை! 80-களில் மேற்கிந்தியத் தீவுகள் அணி எப்படி கிரிக்கெட்டில் ஜாம்பவனாக வலம் வந்ததோ... அதேபோல 50, 60-களில் செஸ்ஸில் சோவியத் ரஷ்யா (பிரிவினைக்கு முன்) வலம் வந்தது. இப்போது அந்தப் பெருமை... இந்தியாவுக்கு!

சர்வதேச அளவில் எந்தவொரு செஸ் டோர்னமென்ட் என்றாலும் இப்போது நம் இந்திய செஸ் இளம்படையினரே கோலோச்சுகின்றனர். ஒருபுறம் பிரக்ஞானந்தா நார்வே செஸ் தொடரில் உலகின் முதல்நிலை வீரரான மேக்னஸ் கார்ல்சனையே வீழ்த்துகிறார். மறுபுறமோ, 20 வயதைக் கூடத் தாண்டாத குகேஷ் உலக செஸ் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று முஷ்டி முறுக்குகிறார். இவர்களோடு இம்முறை அர்ஜுன் எரிகைசியும் இணைந்தது பதக்க வாய்ப்பை ஏறக்குறைய தொடருக்கு முன்பாகவே முடிவு செய்துவிட்டது. ஓப்பன் பிரிவில் தொடரின் தொடக்கம் முதல் இறுதிவரை ஆதிக்க நாயகனாகவே வலம் வந்த இந்தியா, இறுதியில் 21 புள்ளிகளோடு முதலிடத்தைக் கைப்பற்றியது. அடுத்த இடங்களைப் பிடித்த ஐந்து அணிகள் தலா 17 புள்ளிகளை மட்டுமே பெற்றிருந்தன. பெண்கள் பிரிவில், ஒரு புள்ளி வித்தியாசத்தில் வென்று கிரீடம் சூடினர் தங்க மகள்கள்.

பொதுப்பிரிவு மற்றும் பெண்களுக்கான பிரிவு என இரண்டிலுமே இந்தியா தங்கம் வென்றிருப்பது இதுதான் முதன்முறை. ஒரே

ஒலிம்பியாடில் இது நிகழ்வது அபூர்வம். இதற்கு முன்பாக, இது சோவியத் ரஷ்யாவும் சீனாவும் மட்டுமே நிகழ்த்தியிருந்த அரிய சாதனை. இது மட்டுமன்றி, இரு பிரிவிகளிலும் மேலும் நான்கு தனிநபர் தங்கங்களையும் இந்திய வீரர்கள் வென்றிருக்கின்றனர். இந்தியாவின் செஸ் கிராஃபில் இதுவே உச்சகட்டம் என்று கூறிவிட முடியாது. வெற்றிகள் தொடர வேண்டும். என்றாலும், இது கொண்டாடித் தீர்க்க வேண்டிய தருணம்.

விஸ்வநாதன் ஆனந்த். ஒரு பிரமாண்ட சாதனைக்கு ஊக்கமளிக்க தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான வெற்றி அவசியம். இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டரான ஆனந்த் அதைத்தான் இந்திய சதுரங்க உலகிற்குச் செய்திருக்கிறார். இந்திய செஸ்ஸில் வி. ஆ. முன், வி. ஆ. பின் எனக் காலக்கோடு வரைந்து பேசும் அளவிலானது அவரது சாதனையும் அதன் விளைவாக இந்திய செஸ் பெற்றிருக்கும் வளர்ச்சியும்.

1988-ல் இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டராக விஸ்வநாதன் ஜொலித்தார். அது நடந்து அடுத்த 12 ஆண்டுகளில், அதாவது 2000-ம் ஆண்டு மொத்தம் ஐந்து கிராண்ட் மாஸ்டர்களை இந்தியா பார்த்திருந்தது. அடுத்த 12 ஆண்டுகளில், 2012-ல் இது 29 ஆக இருந்தது. 2024-ல் இது 85 ஆக உயர்ந்திருக்கிறது. வியக்க வைக்கிறதல்லவா?! இப்போதுள்ள 85 கிராண்ட் மாஸ்டர்களில் 31 பேர், அதாவது 48% பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதிலேயே தெரியும் எந்தளவு ஆனந்தின் தாக்கம் இருந்திருக்கிறது என்பது.

இந்தியாவில், குழந்தைகள் செஸ்ஸை நோக்கி நகர்வது அதிகரித்துக்கொண்டே வருகிறது. பெற்றோர்களும் அவர்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள். பள்ளியின் இணைச் செயல்பாடுகளில் தவிர்க்க முடியாத ஒன்றாக செஸ் இடம்பிடித்துள்ளது. தனி வகுப்புகளுக்கும் மாணவர்கள் செல்கிறார்கள். 2022-ல் சென்னையில் பல சவால்களையும் தாண்டி நடத்தப்பட்ட செஸ் ஒலிம்பியாட், இன்னமும் அதிகளவிலான ஆர்வத்தை சிறார்களிடையே தூண்டியுள்ளது. அடுத்த 12 ஆண்டுகளில் இந்திய கிராண்ட் மாஸ்டர்களின் எண்ணிக்கை 200-ஐ எட்டாவிட்டால்தான் ஆச்சர்யம். தமிழகத்தில் உள்ள 31 கிராண்ட் மாஸ்டர்களும், பிரக்ஞானந்தா, வைஷாலி, முகேஷின் தனிப்பட்ட மற்றும் கூட்டு வெற்றிகளும் பலரையும் செஸ்ஸை நோக்கி ஈர்க்கும்.

பெண்கள் பிரிவில் முதன்முறையாக தங்கம் வென்றிருக்கிறது இந்தியப் பெண்கள் படை. ஹரிகா, வைஷாலி, திவ்யா தேஷ்முக், வந்திகா அகர்வால், சச்தேவ் என அவர்கள் மிகச் சிறப்பாகவே செயல்பட்டனர். குறிப்பாக, வந்திகா மற்றும் திவ்யா தேஷ்முக் இருவரது இணையில்லாத ஆட்டம் தங்கத்தை இந்தியாவின் வசம் சேர்த்தது. அதுவும், இந்தியாவின் முதல் நிலை வீரரான கோனேறு ஹம்பி இல்லாமலேயே இதனைச் சாத்தியமாக்கி இருக்கிறது மகளிர் படை.

2025-ம் ஆண்டை சமூக செஸ் ஆண்டாக அறிவித்திருக்கும் சர்வதேச செஸ் ஃபெடரேஷன், ஆன்லைன் செஸ் உட்பட பலதரப்பட்ட நிலையிலான செஸ் போட்டிகளை அடுத்த ஆண்டு முழுவதும் திட்டமிட்டுள்ளது. இச்சூழலில், பிரபல செஸ் வீரரான ஹங்கேரியின் ஜூடித் போல்கர், பெண்களுக்கென பிரத்யேகமாக இருக்கும் கிராண்ட் மாஸ்டர் டைட்டில்களை நீக்க கோரிக்கை விடுத்துள்ளார். ‘ஆண்களுக்கு சமமாக சவால் விடுமளவு நாங்களும் ஆயத்தமாக உள்ளோம்‘ என்பதே அதில் உள்ள செய்தி.

மொத்தத்தில், செஸ் ஒலிம்பியாடில் வென்ற நட்சத்திரங்களை, முன்பு எப்போதும் இல்லாத வகையில் இந்திய ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்திய அணியின் கடும் முயற்சிக்கான பலன் இது. அடுத்து... உலக செஸ் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் குகேஷ், சீனாவின் டிங் லிரனை சந்திக்கப் போகும் த்ரில் நிமிடங்களைக் கொண்ட நவம்பர் மாதத்துக்காகக் காத்திருப்போம்.

- S.**ஜெயராஜ்**



# “இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும்!”

# துணை முதலமைச்சர்

இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக தமிழ்நாட்டை கொண்டு வர வேண்டும் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டு போட்டிகள் 04.10.2024 முதல் 24ம் தேதி வரை சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் நடைபெறுகிறது. தடகளம், டென்னிஸ், பேட்மிண்டன், கபடி, சிலம்பம், பளுதூக்குதல், கால்பந்து, ஹாக்கி, குத்துச்சண்டை, நீச்சல், கிரிக்கெட், கூடைப்பந்து, கைப்பந்து, கேரம், வாள்வீச்சு, செஸ், ஜிம்னாஸ்டிக்ஸ் உள்பட 36 வகையான விளையாட்டுகள் நடத்தப்படுகிறது.

இந்த நிலையில், சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தொடக்க விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் போட்டியை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது,

‘மாணவர்கள் முன்னிலையில் இந்தப் போட்டியை தொடங்கி வைப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. உங்களிடம் உள்ள உற்சாகம் எனக்கு தொற்றிக் கொண்டது. நான் துணை முதலமைச்சர் ஆக பொறுப்பேற்றுக்கொண்ட பின் நான் போட்ட முதல் கையெழுத்து இந்த போட்டிக்கான கையெழுத்துதான். இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு சிறப்பு உள்ளது. ஆனால், இந்தியாவில் அனைத்து துறைகளிலுமே சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடுதான்.

- ராதிகா.S

# ‘கூல் லிப்’ பாக்கெட்டுகளில் மண்டை ஓடு படம் அச்சிடப்படாதது ஏன்?

# ஐகோர்ட் கேள்வி

கூல்-லிப் போன்ற போதைப் பொருள் பாக்கெட்டுகளில் மண்டை ஓடு படம் அச்சிடப்படாதது ஏன் என குட்கா நிறுவனங்களுக்கு மதுரை உயர்நீதிமன்றக் கிளை கேள்வி எழுப்பியுள்ளது.

மதுரை உட்பட பல்வேறு மாவட்டங்களில் போதைப் பொருள் விற்பனை வழக்குகளில் கைதானவர்கள், தலைமறைவாக இருப்பவர்கள் தாக்கல் செய்த ஜாமீன், முன்ஜாமீன் மனுக்களை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிபதி பரத சக்கரவர்த்தி விசாரித்து வருகிறார். முந்தைய விசாரணையின் போது, “கூல்-லிப் போன்ற போதைப் பொருட்களை பாதுகாப்பற்ற உணவுப் பொருளாக அறிவித்து, அந்தப் பொருட்களுக்கு இந்தியா முழுவதும் ஏன் தடை விதிக்கக்கூடாது என மத்திய, மாநில அரசுகள் விளக்கம் அளிக்க நீதிபதி உத்தரவிட்டார். பின்னர் கூல்-லிப் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தெலங்கானா, கர்நாடகாவைச் சேர்ந்த 3 நிறுவனங்களுக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி பரத சக்கரவர்த்தி முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது குட்கா நிறுவனம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வாதிடுகையில், “தமிழகத்தில் விழுப்புரம் உள்ளிட்ட 3 மாவட்டங்களில் பத்து சதவீதம் சிறார்கள் ஏதேனும் ஒரு போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். குடும்பப் பிரச்சினை, தனிநபர் துன்புறுத்தல்கள் போன்ற காரணங்களால் போதை மருந்து பழக்கத்துக்கு சிறார்கள் உட்படுகின்றனர்.

கூல்-லிப் உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை, கோட்பா (COTPA) விதிகளால் முறைப்படுத்தப்படுகிறது. இந்த விதிப்படி பாக்கெட்டில் எச்சரிக்கை வாசகங்கள், புகைப்படங்கள் அச்சிடப்படுகிறது. சில மருந்துகளை (சிரப்) போதைக்காக பயன்படுத்துவதும் நடைபெறுகிறது. திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது” என்றார்.

பின்னர் நீதிபதி, “மத்திய அரசு மெல்லும் வகையிலான போதைப் பொருட்களுக்கு தடை விதிக்கக் கோரி அனைத்து மாநிலங்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. சில மாநிலங்கள் அதை பின்பற்றி வரும் நிலையில், அந்த உத்தரவுக்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. கூல்-லிப் தயாரிப்பு நிறுவனங்கள் கோட்பா விதிகளுக்கு உட்படும் என்றால், அதில் அபாயத்தை குறிப்பிடும் மண்டை ஓடு அடையாளம் ஏன் அச்சிடப்படவில்லை? அதோடு அதன் மீது இருக்கும் எச்சரிக்கை வாசகமாக, ‘டுபாக்கோ யூசர்ஸ் டை யங்கர்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




இந்த வாசகத்தை. ‘புகையிலை பயன்படுத்துபவர்கள் இளமையிலேயே இறக்கிறார்கள்’ எனப் பொருள் கொள்ளாமல், ‘இறக்கும் போதும் இளமையாக இருக்கலாம்‘ எனத் தவறாக புரிந்துகொண்டால், அது விளம்பரம் போல் ஆகிவிடும். எனவே, கோட்பா சட்ட விதி 7-ன் கீழ் புகையிலை போதைப் பொருள் பாக்கெட்டுகளில் அபாயத்தை குறிப்பிடும் மண்டை ஓடு படம் அச்சிடப்பட வேண்டும்.

இது தொடர்பாக குட்கா நிறுவனங்கள் பதிலளிக்க வேண்டும். மேலும், போதைப்பொருள் பயன்பாட்டை குறைக்க வேறு என்ன மாதிரியான எச்சரிக்கைகள் வழங்கலாம் என்பது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டும். விசாரணை அக். 16க்கு ஒத்திவைக்கப் படுகிறது” என உத்தரவிட்டார்.

**- அன்புமணி**

# ஒருவேளை தேனீக்களால் நடைபெறும் மகரந்த சேர்க்கை நடைபெறாமல் போனால்?



நம் வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் மருத்துவ பொருள்களில் முதன்மை இடம் தேனுக்கு உண்டு. தேன் எவ்வளவு ஒரு அரிய பொருளாக பயன்படுகிறதோ, அதைப்போலவே தேனை உற்பத்தி செய்யக்கூடிய தேனீக்களும் சுற்றுச்சூழலில் மிகுந்த முக்கியத்துவம் பெறக்கூடிய ஒரு பூச்சி இனமாகும்.

பார்ப்பதற்கு மிகவும் சிறியதாக இருக்கக்கூடிய இந்த வகை தேனீக்கள் இல்லையென்றால் உணவின் உற்பத்தி மிகவும் பாதிக்கப்படும் என்பது ஆச்சரியமான உண்மை! காலநிலை மாற்றம், காடுகளின் அழிப்பு, பூச்சிக்கொல்லி மருந்துகள், காற்று மாசுபாடு, ரசாயன உரம் போன்ற பல்வேறு காரணங்களால் தேனீக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

மனிதனின் உணவு உற்பத்தியில் 3 ல் 1 பங்கு தேனீக்கள், பட்டாம்பூச்சிகள் போன்ற மகரந்த சேர்க்கையாளர்களை நம்பியே உள்ளது. தேனீக்கள் ஒரு தாவரத்தில் உட்காரும்போது அதில் உள்ள மகரந்த தூள் ஒரு தாவரத்தில் இருந்து மற்றொரு தாவரத்திற்கு கடத்தப்படுவதனால் மகரந்த சேர்க்கை நடைபெறுகிறது. இதனால் தாவரங்களின் இனப்பெருக்கம் அதிகரிக்கிறது. எனவே தாவரங்களில் நடைபெறும் மகரந்த சேர்க்கையில் 80 சதவீதத்திற்கு காரணமாக இருப்பவை தேனீக்கள், பட்டாம்பூச்சிகள் போன்ற பூச்சி வகைகளே.

தேனீக்கள் பூக்களில் அமர்ந்து தேன் சேகரிக்கும் போது அதன் காலில் ஒட்டிக்கொள்ளும் மகரந்தத்தூள் மற்றொரு பூவில் அமரும் போது அதில் உள்ள மகரந்தத்துடன் சேர்ந்து மகரந்த சேர்க்கை நடைபெறுகிறது. இதனால் இயற்கையாகவே பல்வேறு தாவரங்களும், மரங்களும் செழித்து வளர்ந்து காடுகளாகவும், சோலைகளாகவும் மாறத் தொடங்குகின்றன. எனவே தேனீக்கள் தேன் உற்பத்திக்கு மட்டுமல்லாது உணவு உற்பத்தியிலும் முக்கிய பங்காற்றுகிறது என்றே சொல்லலாம்.

ஒருவேளை தேனீக்களால் நடைபெறும் மகரந்த சேர்க்கை நடைபெறாமல் போனால் தாவரங்களின் இனப்பெருக்கம் கடுமையாக பாதிக்கப்படும். இதனால் உணவு உற்பத்தி குறைந்து மனித குலம் அழிவை நோக்கி செல்வதற்கு கூட வாய்ப்பு ஏற்படக்கூடும். மேலும் மாறிவரும் கால நிலைகளால் பூக்கள் முன்பு போல் உரிய காலத்தில் பூப்பதில்லை. இதனால் தேனீக்கள் கடுமையாக பாதிப்பு அடைவதோடு தாவரங்களின் பெருக்கமும் குறைய தொடங்குகிறது. குளிர்காலம் மற்றும் பூ பூக்காத காலங்களில் ஏற்படும் உணவு தட்டுப்பாட்டை நீக்குவதற்காகவே தேனீக்கள் தங்கள் கூட்டில் தேனை சேமித்து வைத்துக் கொள்கின்றன.

காலநிலை மாற்றங்களால் கடுமையான வெயில் போன்றவை ஏற்படும்போது அந்த தேன் கூட்டில் தேனீக்கள் தாக்குபிடித்து வாழ முடியாத ஒரு சூழல் ஏற்படுகிறது. இதோடு மட்டுமல்லாமல் காலநிலை மாற்றங்களால் தேனை சேகரிப்பதற்கு அதிகம் உழைக்க வேண்டிய தேவையையும் ஏற்படுகிறது. பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகளை தாவரங்களில் அதிகமாக பயன்படுத்தும் போது அதில் அமரும் தேனீக்கள் அதில் உள்ள விஷத்தன்மையால் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. இதுவும் தேனீக்களின் எண்ணிக்கை குறைவதற்கு ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

மேலும் இன்றைய நவீன காலங்களில் குறைந்து வரும் விவசாய நிலங்களால் தேனீக்கள் தேனை சேகரிப்பதற்கு நெடுந்தொலைவு செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. இதுவும் அவற்றின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு ஒரு முக்கிய காரணம்.

சாதாரண தேனீக்களைப் போல் இல்லாமல் காட்டு தேனீக்கள் கூடு கட்டுவதற்கும், மகரந்த



சேர்க்கை நடைபெறுவதற்கும் மிகப்பெரிய மரங்களும் மிகப் பெரிய வாழ்விடங்களும் தேவைப்படுகின்றன. ஆனால் பெருகிவரும் மனிதனின் தேவைக்கேற்ப காடுகளும் மரங்களும் அதிக அளவில் அழிக்கப்பட்டு வருவதால் அதனோடு சேர்ந்து தேனீக்களும் அழிக்கப்பட்டே வருகின்றன.

எனவே உணவு உற்பத்தியில் முக்கிய பங்காற்றக் கூடிய தேனீக்களை பாதுகாப்பது மனிதர்களின் முக்கிய கடமையாகும். தாவரங்கள் மற்றும் மரங்கள் அடங்கிய பசுமைப் பரப்பை அதிக அளவில் உருவாக்குவதும், இருக்கக்கூடிய பசுமையை அழிக்காமல் பாதுகாத்து வருவதும்தான் பற்றாக்குறை இல்லாத உணவு தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கான ஒரே தீர்வாக இருக்கும்.

**வனவிலங்குகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்கும் தேனீக்கள்!**

வனவிலங்குகள் விவசாயப் பயிர்களை சேதம் செய்வதால், அறுவடை செய்ய முடியாமல் பல விவசாயிகள் நட்டத்தை சந்திக் கின்றனர். இதனைத் தடுக்க, எந்தவித பாதிப்பும் இல்லாமல், அதோடு கூடுதல் வருமானமும் கிடைத்து, வனவிலங்குகளை விரட்டும் ஒரு சூப்பரான ஐடியா இருக்கிறது என்றால் யார் தான் வேண்டாம் என சொல்லப் போகிறார்கள். வாங்க அந்த ஐடியாவை கேட்போம்.

விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பயிரை அறுவடை செய்து சந்தைக்கு கொண்டு வருவதற்குள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை, பூச்சித் தாக்குதல், உரங்களின் விலையேற்றம், மகசூல் குறைதல் மற்றும் விலை சரிவு இப்படி எவ்வளவோ பிரச்சினைகள் விவசாயிகளை வாட்டி வதைக் கிறது. இதில் கூடுதலாக இரவில் வனவிலங்குகள் அவ்வப்போது வந்து பயிர்களை சேதம் செய் கின்றன. இதனைத் தடுக்க விவசாயிகள் பல வழிமுறைகளை கையாண்டாலும், அதில் சில இடர்பாடுகளும் இருக்கின்றன. இருப்பினும் சில விவசாயிகள் பயிர்களின் பாதுகாப்பிற்காக இரவு நேரங்களில் வயல்களிலேயே தங்கி விடுகின்றனர்.

வனவிலங்குகளில் பெரும்பாலும் யானைகள் தான் காடுகளை விடுத்து, ஊர்ப் பகுதிகளுக்குள் புகுந்து விடுகின்றன. இவை உருவில் பெரிதாக இருப்பதால், விவசாய நிலங்களில் இறங்கினால் பயிர்கள் முழுவதும் சேதமடைவது உறுதி. இதனால் பெரும் நட்டத்தை சந்திக்கும் விவசாயிகள், மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர். யானைகளைத் துரத்த சில விவசாயிகள் வெடி வெடிப்பதுண்டு. இதனால், அதிக சத்தத்தைக் கேட்கும் யானைகள் திசையறியாமல் ஓடுகின்றன. இருப்பினும் வனவிலங்குகளையும் நாம் பாதுகாக்க வேண்டியது அவசியமல்லவா! இதற்குத் தான் நாம் தேனீக்களைப் பயன்படுத்த வேண்டும்.

அவ்வளவு பெரிய யானையை விரட்ட சிறு தேனீ போதுமா என்று வியப்பாக இருக்கிறதா! இயற்கையின் ஒவ்வொரு படைப்பும் நமக்கு நிச்சயமாக உதவும் வகையில் தான் இருக்கிறது என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். உங்கள் வயல் ஓரங்களில் தேனீ பெட்டிகளை வைத்து தேனீக்களை வளர்க்கத் தொடங்குங்கள். இந்தத் தேனீக்கள் இருக்கும் வரை யானைகளால் பயிர்களை நெருங்கவே முடியாது. தேனீக்களைக் கண்டால் யானைகளுக்கு பயமாம். ஏனெனில் யானைகளின் கண்கள் மற்றும் தும்பிக்கையில் தேனீக்கள் கொட்டி விடும். இதனால் தேனீக்களின் சத்தத்தைக் கேட்டால் போதும்; யானைகள் வேறு திசை நோக்கிச் சென்று விடும்.

வயல்களில் தேனீ வளர்ப்பதன் மூலம் பாதிப்புகளைத் தவிர்ப்பது மட்டுமின்றி, யானைகளையும் நாம் பாதுகாக்க முடியும். மேலும், தேனீக்களின் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும் கிடைக்கும். அட இந்த ஐடியா நல்லா இருக்கே என நாம் இங்கு சொல்வதற்கு முன்பே, ஆப்பிரிக்க நாடுகளில் இதனை செயல்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார்களாம். அங்கு வனவிலங்குகளை பயமுறுத்துவதற்கு வெடிகளைப் பயன்படுத்தக் கூடாது. ஆகையால் தான் தேனீக்களைப் பயன்படுத்தி யானைகளைப் பாதுகாப்பாக திசை திரும்புகின்றனர்.

விவசாயிகளே! இனி நீங்களும் தேனீக்களைப் பயன்படுத்தி வனவிலங்குகளை விரட்ட முயற்சி செய்யுங்கள். விவசாயத்தை மட்டுமல்ல, வனவிலங்குகளையும் அழிவின் பாதையில் இருந்து மீட்டெடுங்கள்.

- D.பாமா

# ‘ஆண்களுக்கான மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி-2024’ மற்றும் ‘பெண்களுக்கான மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி-2024’




தமிழ்நாடு காவல்துறை, ஆண் மற்றும் பெண் காவலர்களின் திறமைகளை அங்கீகரிக்கவும் அவர்களுக்கு ஒரு மேடை அமைத்துக் கொடுத்து அவர்களின் துப்பாக்கி சுடும் திறன்களை கூர்மைப்படுத்துவதற்காகவும், செங்கல்பட்டு மாவட்டம், ஒத்திவாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அதிதீவிர படை பள்ளி பயிற்சி மையம் / துப்பாக்கிச் சுடு தளத்தில் 26.09.2024 முதல் 28.09.2024 வரை (i) ஆண்களுக்கான மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி - 2024 மற்றும் (ii) பெண்களுக்கான மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி - 2024 ஆகிய இரண்டு போட்டிகளை நடத்தியது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக நடத்தப்பட்ட 13 வகையான போட்டிகளில் (ரைபிள்-5, பிஸ்டல்/ ரிவால்வர்-4) மற்றும் கார்பைன்/ஸ்டென்-கன்-4), தமிழ்நாடு காவல்துறையின் பல்வேறு நகரங்கள்/ மண்டலங்கள்/சிறப்புப் பிரிவுகளில் பணிபுரியும் 198 ஆண்கள் ஒன்பது அணிகளாகவும், 120 பெண்கள் எட்டு அணிகளாகவும், மொத்தம் 318 பேர் கலந்து கொண்டனர்.

27.09.2024 அன்று நடைபெற்ற ஆண்களுக்கிடையேயான ஒட்டுமொத்த ரைபிள் துப்பாக்கிச் சுடுதல் போட்டிகளில், தலைமை-யிட அணி சாம்பியன்ஷிப் கோப்பையை கைப்பற்றியது. இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) மற்றும் மூன்றாமிட கோப்பைகளை முறையே தெற்கு மண்டலம் மற்றும் மேற்கு மண்டல அணிகள் கைப்பற்றின. மேலும், 28.09.2024 அன்று நடைபெற்ற பெண்களுக்கிடையேயான

ஒட்டுமொத்த ரிவால்வர்/பிஸ்டல் துப்பாக்கி சுடும் போட்டிகளில் வடக்கு மண்டல அணி சாம்பியன்ஷிப் கோப்பையை கைப்பற்றியது. மேற்கு மண்டலம் மற்றும் சென்னை பெருநகரக் காவல் அணிகள் இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) மற்றும் மூன்றாமிட கோப்பைகளை முறையே கைப்பற்றின. இதேபோல், மேற்கு மண்டல அணி கார்பைன்/ஸ்டென்கன் துப்பாக்கி சுடும் போட்டிகளில் சாம்பியன்ஷிப் கோப்பையை கைப்பற்றியது. சென்னை பெருநகரக் காவல் மற்றும் தாம்பரம் மாநகர காவல் அணிகள் முறையே இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) மற்றும் மூன்றாமிட கோப்பைகளை கைப்பற்றின.

28.09.2024 அன்று நடைபெற்ற ஆண்களுக்கிடையேயான ரிவால்வர்/ பிஸ்டல் துப்பாக்கி சுடும் போட்டிகளில் தலைமை-யிட அணி சாம்பியன்ஷிப் கோப்பையை கைப்பற்றியது. ஆயுதப்படை மற்றும் மத்திய மண்டல அணிகள் இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) மற்றும் மூன்றாமிட கோப்பைகளை முறையே கைப்பற்றின. இதேபோல், மத்திய மண்டல அணி கார்பைன்/ ஸ்டென்-கன் துப்பாக்கி சுடும் போட்டிகளில் சாம்பியன்ஷிப் கோப்பையை கைப்பற்றியது. தலைமை-யிடம் மற்றும் தெற்கு மண்டல அணிகள் முறையே இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) மற்றும் மூன்றாமிட கோப்பைகளை கைப்பற்றின. மேலும், 28.09.2024 அன்று நடைபெற்ற பெண்களுக்கிடையேயான ரைபிள் துப்பாக்கிச் சுடுதல் போட்டிகளில், சென்னை பெருநகர காவல் அணி சாம்பியன்ஷிப் கோப்பையை கைப்பற்றியது. இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) மற்றும் மூன்றாமிட கோப்பைகளை முறையே மேற்கு மண்டலம் மற்றும் வடக்கு மண்டல அணிகள் கைப்பற்றின.

மேலும், ஆண்களுக்கான மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி-2024 -ன் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை (Overall Championship) தலைமையிட அணி வென்றது. மத்திய மண்டல அணி ஒட்டுமொத்த இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) கோப்பையையும் ஆயுதப் படை அணி ஒட்டுமொத்த மூன்றாமிட கோப்பையையும் கைப்பற்றியது. போலவே, பெண்களுக்கான மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி-2024 -ன் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை மேற்கு மண்டல அணி வென்றது. வடக்கு மண்டல அணி ஒட்டுமொத்த இரண்டாமிட (ரன்னர்ஸ் அப்) கோப்பையையும் பெருநகர சென்னைக் காவல் அணி ஒட்டுமொத்த மூன்றாமிட கோப்பையையும் கைப்பற்றியது.

மேலும், இந்த போட்டிகளின் ஒவ்வொரு பிரிவு போட்டியிலும் 1வது, 2வது மற்றும் 3வது இடங்களைப் பெற்ற ஆண் மற்றும் பெண் துப்பாக்கி சுடும் வீரர்களுக்கு, 26 தங்கம், 26 வெள்ளி மற்றும் 26 வெண்கலப் பதக்கங்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் வழங்கப்பட்டன. கூடுதலாக, ரிவால்வர்/பிஸ்டல் மற்றும் கார்பைன்/ஸ்டென்-கன் பிரிவுகளில் அதிக மதிப்பெண் பெற்ற சிறந்த துப்பாக்கி சுடும் வீரர்களுக்கு 'ஒட்டுமொத்த சிறந்த ஷாட்' என்ற பிரிவின் அடிப்படையில், 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. போலவே, இதே பிரிவுகளில் அதிக மதிப்பெண் பெற்ற சிறந்த துப்பாக்கி சுடும் வீராங்கனைகளுக்கும் 'ஒட்டுமொத்த சிறந்த ஷாட்' என்ற பிரிவின் அடிப்படையில், 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

27.09.2024 அன்று நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உயர்திரு சந்தீப் ராய் ரத்தோர் இ.கா.ப, காவல்துறை இயக்குநர், பயிற்சி, அவர்கள் வாழ்த்துரை வழங்கி பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் சுழற்கேடயங்கள் அளித்து சிறப்பித்தார்கள். 28.09.2024 அன்று நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உயர்திரு. அ.அமல்ராஜ், இ.கா.ப, கூடுதல் காவல்துறை இயக்குநர், அமலாக்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் சுழற்கேடயங்கள் அளித்து சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில். திருமதி. வே.ஜெயஸ்ரீ இ.கா.ப, காவல் துறைத் தலைவர், செயலாக்கம் மற்றும் திரு த.செந்தில் குமார் இ.கா.ப, காவல்துறைத் தலைவர், மேற்கு மண்டலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

– K.மாரிதுரை

# தினமும் கருப்பு அரிசி சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்!!!



கறுப்பு கவுனிகள் என்பது தனிச் சுவையும், அமைப்பும் கொண்ட அரிசி வகை. அவை ‘கவுனிபக்’ அல்லது ‘நெல் அரிசி’ என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த கட்டுரை கவுனிகளின் சில ஆரோக்கிய நன்மைகளைப் பற்றி விவாதிக்கிறது.

கவுனிஸ் (அல்லது நெல் அரிசி) என்பது இந்தியாவில் முக்கியமாக தமிழ்நாட்டில் விளையும் அரிசி வகையாகும். தானியங்கள் ஓவல் வடிவத்தில் உள்ளன மற்றும் தனித்துவமான வாசனையைக் கொண்டுள்ளன. அவை பொதுவாக இட்லி, தோசை, வடை, புளியோகரே மற்றும் சாம்பார் போன்ற உணவுகளில் சமைக்கப்படுகின்றன.

**கருப்பு கவுனி அரிசி சத்துகள்?**

“கவுனிகளில் இரும்பு, மக்னீசியம், துத்தநாகம், கால்சியம், வைட்டமின் பி1, பி2 மற்றும் சி ஆகியவை நிறைந்துள்ளன. அதிக அளவு புரதம், கார்போஹைட்ரேட், நார்ச்சத்து மற்றும் அத்தி யாவசிய அமினோ அமிலங்கள் உள்ளன. கொழுப்பு மற்றும் சோடியம் குறைவாக உள்ளது.”

**கருப்பு கவுனி அரிசியின் ஆரோக்கிய நன்மைகள் என்ன?**

நார்ச்சத்து மற்றும் ஊட்டச்சத்துக்களின் வளமான ஆதாரம்:

மற்ற தானியங்களை விட கருப்பு கவுனியில் அதிக நார்ச்சத்து உள்ளது. இது போதுமான அளவு கார்போஹைட்ரேட்டுகள், புரதங்கள் மற்றும் கொழுப்புகளை வழங்குகிறது.

**அழற்சி எதிர்ப்பு பண்புகள்:**

அரிசியில் லிக்னன்ஸ் எனப்படும் சேர்மங்கள் உள்ளன, இது உடலில் ஏற்படும் அழற்சியின் அளவைக் குறைக்க உதவுகிறது.

இந்த அரிசியில் அதிக அளவு வைட்டமின் பி12 உள்ளது. வைட்டமின் பி12 மூளை செல்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. இந்த சத்து இல்லாததால் மனச்சோர்வு, டிமென்ஷியா போன்ற பல்வேறு நரம்பியல் கோளாறுகள் ஏற்படுகின்றன.

**கனிமங்கள் நிறைந்தவை:**

கவுனிகள் இரும்பு, கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், துத்தநாகம், தாமிரம், மாங்கனீஸ், செலினியம் மற்றும் மாலிப்டினம் ஆகியவற்றின் நல்ல ஆதாரங்கள். இந்த கூறுகள் நம் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**ஆன்டிஆக்ஸிடன்ட்கள் அதிகம்:**

பழுப்பு அரிசியுடன் ஒப்பிடும்போது கவுனிகளில் அதிக அளவு ஆக்ஸிஜனேற்றங்கள் உள்ளன. ஆன்டிஆக்ஸிடன்ட்கள் புற்றுநோயை உண்டாக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றன.

### இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது:

கருப்பு கவுனியில் அதிக அளவு பொட்டாசியம் உள்ளது, இது இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. கொலஸ்ட்ரால் அளவையும் குறைத்து பக்கவாதம் வராமல் தடுக்கிறது.

### முடி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது:

இது முடி உதிர்தல் பிரச்சனையால் அவதிப்படு பவர்களுக்கு சிறந்த உணவாக அமைகிறது.

### மலச்சிக்கலைத் தடுக்கும்:

இந்த அரிசியில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை தடுக்க உதவுகிறது.

### புற்றுநோயைத் தடுக்க:

இந்த அரிசியில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் புற்றுநோய் செல்களை எதிர்த்து போராட உதவுகிறது. செல் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஃப்ரீ ரேடிக்கல்களிலிருந்தும் இது பாதுகாக்கிறது.

### எடை அதிகரிப்பைக் குறைக்கிறது:

தினமும் ஒரு கப் அவித்த கவுணி சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.

### நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது:

இந்த அரிசி வகைகளில் காணப்படும் புரதம் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது மற்றும் இயற்கையாகவே நோய்த் தொற்றுகளை எதிர்த்து போராடுகிறது.

### சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும்:

அதிக கார்போஹைட்ரேட் உட்கொள்ளல் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உதவுகிறது. கருப்பு கவுனியில் சாதாரண அரிசியை விட 5 மடங்கு அதிக மாவுச்சத்து இருப்பதால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும்.

### ஆற்றல் தருகிறது:

தினமும் இரண்டு டம்ளர் கவுனிகளை உட்கொள் வது நீடித்த ஆற்றலைத் தருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### செரிமானத்திற்கு உதவுகிறது:

கவுனிகளை தொடர்ந்து உட்கொள்வது செரிமானத்திற்கு உதவுகிறது, ஏனெனில் அவை அமிலேஸ், புரோட்டீஸ் மற்றும் லிபேஸ் போன்ற நொதிகளைக் கொண்டுள்ளன. இந்த நொதிகள் முறையே புரதங்கள், கொழுப்புகள் மற்றும் கார்போஹைட்ரேட்டுகளை உடைக்கின்றன.

### மூளையின் செயல்பாட்டைப் பாதுகாக்கிறது:

தொடர்ந்து கவுனிகளை உட்கொள்வது அறிவாற்றல் திறன்களை மேம்படுத்துகிறது. கவுனிகளை உட்கொள்வதால் நினைவாற்றல் மற்றும் செறிவு அதிகரிக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும்:

கவுனியில் உள்ள ஆக்ஸிஜனேற்ற பண்புகள் இதயத்தைப் பாதுகாக்கிறது. இந்த தானியத்தின் வழக்கமான நுகர்வு உடலின் ஒட்டுமொத்த ஆக்ஸிஜன் அளவை அதிகரிக்கிறது மற்றும் தமனிகளை சுத்தமாக வைத்திருக்கும்.

### உடல் பருமனை தடுக்கிறது:

வாரத்திற்கு மூன்று முறையாவது கவுனிகளை தவறாமல் சாப்பிட்டு வந்தால் அதிக எடை மற்றும் உடல் பருமன் ஆகிய இரண்டையும் தடுக்கலாம் என்று ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

### எலும்பு அடர்த்தியை அதிகரிக்கிறது:

தினமும் கவுனிகளை உட்கொள்வதால், எலும்புகளில் கால்சியத்தின் அளவு அதிகரிக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வலுவான எலும்புகளை உருவாக்க கால்சியம் தேவைப்படுகிறது.

### கொலஸ்ட்ராலை குறைக்கிறது:

கவுனியில் உள்ள நார்ச்சத்து கெட்ட எல்டிஎல் கொழுப்பைக் குறைக்கும் அதே வேளையில் நல்ல எச்டிஎல் கொழுப்பை அதிகரிக்கும்.

### உயர் புரத உள்ளடக்கம்:

கவுனிகள் உயர்தர புரதத்தின் சிறந்த மூலமாகும். அவற்றில் பெரும்பாலான தானியங்களை விட அதிக அளவு அமினோ அமிலங்கள், வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்கள் உள்ளன.

### இரும்புச்சத்து நிறைந்தது:

இரும்புச்சத்து குறைபாடு சோர்வு மற்றும் பலவீனத்தை ஏற்படுத்துகிறது. உங்கள் உணவில் மிகவும் தேவையான இரும்புச்சத்தை பெற கவுனிகளை உட்கொள்ளுங்கள்.

– K.கலைமணி

# பிஎம் விரைவு சக்தி: இந்தியாவின் உள்கட்டமைப்பிலும் போக்குவரத்து இணைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது




75வது சுதந்திர தினத்தன்று, பிரதமர் நரேந்திர மோடி செங்கோட்டை கொத்தளத்திலிருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது 'பிஎம் விரைவு சக்தி' முயற்சியை அறிவித்தார். 2021, அக்டோபர் 13 அன்று தொடங்கப்பட்ட பலவகை இணைப்புக்கான தேசியப் பெருந்திட்டம் 2021, அக்டோபர் 13 அன்று அதன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இந்த டிஜிட்டல் தளம் ரயில்வே, சாலைப்போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு அமைச்சகங்களை ஒருங்கிணைத்து உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு போக்குவரத்து முறைகளில் மக்கள், பொருட்கள் மற்றும் சேவைகளின் இயக்கத்திற்கு தடையற்ற, திறமையான இணைப்பை வழங்குவதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் தொலைதூர இணைப்பை மேம்படுத்துகிறது; பயண நேரத்தைக் குறைக்கிறது.

பாரத்மாலா, சாகர்மாலா, உள்நாட்டு நீர்வழிப்பாதைகள், சரக்குகள் ஏற்றும்/நில துறைமுகங்கள், உடான் போன்ற பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளின் உள்கட்டமைப்பு திட்டங்களை பிஎம் விரைவு சக்தி ஒருங்கிணைக்கிறது.

பிஎம் விரைவு சக்தி தேசியப் பெருந்திட்டம், 44 மத்திய அமைச்சகங்கள் மற்றும் 36 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை இணைத்துள்ளது. மொத்தம் 1,614 தரவு அடுக்குகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. தரவு துல்லியத்தை உறுதி செய்வதற்காக, முக்கிய உள்கட்டமைப்பு அமைச்சகங்கள் மூன்றடுக்கு அமைப்புக்கான நிலையான இயக்க நடைமுறைகளை (எஸ்ஓபி) இறுதி செய்துள்ளன.

பிஎம் விரைவு சக்தியை மாவட்ட மட்டத்திற்கு விரிவுபடுத்த மாவட்டப் பெருந்திட்ட போர்ட்டல் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தப் போர்ட்டல் மாவட்ட அதிகாரிகளுக்கு கூட்டாகத் திட்டமிடல், உள்கட்டமைப்பு இடைவெளியை

அடையாளம் காணுதல், திட்ட அமலாக்கம் ஆகியவற்றில் உதவும். இந்த போர்ட்டலின் பீட்டா பதிப்பு ஏற்கனவே 28 ஆர்வமுள்ள மாவட்டங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. 2024, செப்டம்பர் 18 அன்று இந்த மாவட்டங்களுக்கு பயனர் கணக்குகள் வழங்கப்பட்டன. போர்ட்டலின் சோதனை ஓட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. 2024 அக்டோபரில் நோக்குநிலை திட்டங்களுடன், நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்டப் பெருந்திட்ட போர்ட்டல்கள் படிப்படியாக உருவாக்கப்பட்டு 2025, மார்ச் 31-க்குள் முடிக்கப்படும்.

ஒருங்கிணைந்த, திறமையான, செலவு குறைந்த தளவாட நெட்வொர்க்கை உருவாக்குவதன் மூலம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க தேசிய சரக்குப் போக்குவரத்துக் கொள்கை 2022, செப்டம்பர் 17 அன்று தொடங்கப்பட்டது. சரக்குப் போக்குவரத்து செலவுகளைக் குறைப்பது, 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் சரக்குப் போக்குவரத்து செயல்திறன் குறியீட்டு (எல்பிஐ) தரவரிசையை முதல் 25 நாடுகளில் ஒன்றாக மேம்படுத்துவது, தரவு சார்ந்து முடிவெடுப்பதை ஊக்குவிப்பது ஆகியவற்றை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாடு முழுவதும், குறிப்பாக கிராமப்புறங்களில் அகண்ட அலைவரிசை சேவைகளுக்கு உலகளாவிய மற்றும் சமமான அணுகல் பிரதமர் திரு நரேந்திர மோடியின் மிக முக்கியமான பார்வைகளில் ஒன்றாகும். பிஎம் விரைவு சக்தி தேசியப் பெருந்திட்டத்திற்கு இணங்க, மையப்படுத்தப்பட்ட வழி உரிமை ஒப்புதல்களுக்காக “விரைவு சக்தி சஞ் சார்” போர்ட்டல் 2022, மே 14 அன்று தொடங்கப்பட்டது.

விரைவு சக்தி சஞ்சார் போர்ட்டல் என்பது தொலைத் தொடர்பு உள்கட்டமைப்பை விரைந்து உருவாக்க உதவும் வகையில் கொண்டு வரப்பட்ட ஒரு பெரிய சீர்திருத்தமாகும். இது ஒரு மையப்படுத்தப்பட்ட வழி உரிமை போர்ட்டல் ஆகும். இது தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள்/உள்கட்டமைப்பு வழங்குநர்கள் / இணைய சேவை வழங்குநர்கள் போன்ற விண்ணப்பதாரர்களுக்கு வழி உரிமை ஒப்புதல்களுக்கு விண்ணப்பிக்க உதவுகிறது. 2024, அக்டோபர் 11 நிலவரப்படி, 2.11 லட்சம் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்த இணையதளம் அனைத்து 36 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுடனும் தொடர்புடைய ரயில்வே அமைச்சகம், சாலை, போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சகம், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் ஆகிய மத்திய அமைச்சகங்களுடனும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 5ஜி சேவைகள் 2022, அக்டோபர் 1 அன்று தொடங்கப்பட்டன. 13 கோடிக்கும் அதிகமான சந்தாதாரர்கள் 5 ஜி சேவைகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர், இது உலகில் எங்கும் இல்லாத 5 ஜி-ன் விரைவான வெளியீடாகும். நாட்டில் தொலைத்தொடர்பு இணைப்பை மேலும் மேம்படுத்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சுமார் 55 ஆயிரம் கிராமங்களுக்கு 4ஜி இணைப்பை வழங்க ரூ.41,331 கோடி செலவில் மொத்தம் 41,160 மொபைல் கோபுரங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பிஎம் விரைவு சக்தி முன்முயற்சி இந்தியாவில் உள்கட்டமைப்பு வளர்ச்சி மாற்றம்பெறும் அணுகுமுறையை பிரதிபலிக்கிறது. இது தடையற்ற, திறமையான பலவகைப் போக்குவரத்து வலையமைப்பு உருவாக்கத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு அமைச்சகங்களின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலமும், தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதன் மூலமும், நாடு முழுவதும் இணைப்பை மேம்படுத்தவும், சரக்குப் போக்குவரத்து செலவுகளைக் குறைக்கவும் இது முயற்சி செய்கிறது.

- S.பிரகாசம்

# ரயில்களில் திருட்டு சம்பவம்! ரயில்வே புது முடிவு?



நாளுக்கு நாள் ரயில்களில் திருட்டு சம்பவம் அதிகரித்து வருகிறது.. இதனால் பயணிகள் பாதிக்கப்படுவதுடன், ரயில்வே நிர்வாகமும் பெருத்த நஷ்டத்துக்கு ஆளாகிவிடுகிறது.

03.10.2024 அன்றுகூட, ரயில்களில் நடந்த சோதனையில் போதை பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளது அதிர்ச்சியை தந்து வருகிறது.

இந்திய மக்களுக்கு ரயில் சேவைகளின் தேவைகள் தவிர்க்க முடியாதது.. அதனால்தான், ரயில்களின் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டே வருகின்றன.. ரயில்களில் டிக்கெட் செலவு குறைவு என்பதாலும், பாதுகாப்பு நிறைந்ததாலும், விரைந்து பயணிக்க முடியும் என்பதாலும்தான், சாதாரண மக்களும், ரயில்களை பயன்படுத்துகிறார்கள்.

**திருட்டு சம்பவம்:**

எனினும் ரயில்களில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. அதாவது, ரயில்களில் வழங்கப்படும் பெட்ஷீட், தலைகாணி, டவல் உள்ளிட்டவற்றையும், சிலர் கையிலேயே எடுத்து சென்றுவிடுகிறார்களாம்..

இதனால், இந்திய ரயில்வேக்கு தொடர்ந்து புகார்கள் வருவதுடன், ரயில்வே துறைக்கு பெரும் நஷ்டமும் ஏற்படுகிறது.. இப்படித்தான், சத்தீஸ்கர் மாநிலம் பிலாஸ்பூர் மண்டலத்தில் உள்ள ரயில்களில் சுமார் 56 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை மக்கள் திருடிச்சென்றுவிட்டார்களாம்.

**ரயில்வே நிர்வாகம்:**

இதுபோன்ற செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரயில்வே நிர்வாகம் எச்சரித்தும்கூட திருட்டு சம்பவங்கள் குறையவில்லை.. எனவே, பெட்ஷீட் மற்றும் தலையணை திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அடுத்து, ரயில்களின் ஏசி பெட்டிகளில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்க மேற்கு ரயில்வே முடிவு செய்திருப்பதாக தகவல்களும் வெளியாகியிருந்தன..

குறிப்பாக, ரயிலில் பயணம் செய்யும்போது மட்டுமே, அந்த துண்டுகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும், பெட்ஷீட் உள்ளிட்டவற்றை கையோடு எடுத்துச்செல்ல வேண்டாம் என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

**சொத்துக்கள்:**

ரயில்வே சொத்துகளை திருடுவது, சேதப்படுத்துவது என தெரிந்தால், ரயில்வே சொத்து சட்டம் 1966ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், அபராதம் மற்றும் சிறை தண்டனையும் விதிக்கப்படும். இதற்கான அதிகபட்ச தண்டனை 5 ஆண்டுகள்

ஆகும்.. ஆனால், அபராதம் எவ்வளவு என்பது நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும்.

இப்படி ரயில்களில் உள்ள பொருட்களை திருடுவது ஒருபக்கம் என்றால், ரயில் பயணிகளிடம் நடக்கும் திருட்டுகள் அதற்கு மேல் அதிகரித்து வருகின்றன.. தற்போதுகூட ஒரு வீடியோ வெளியாகியிருக்கிறது..

ஓடும் ரயிலில் ஜன்னலோரம் உட்கார்ந்திருந்த சிறுமி, தன்னுடைய செல்போனில் விளையாடி கொண்டிருந்தாள். அப்போது, மர்ம நபர் ஒருவர் திடீரென ஜன்னலில் கையை விட்டு, சிறுமியிடமிருந்து செல்போனை பறித்து ஓடுகிறார்.

**செல்போன்:**

இச்சம்பவம் எங்கே, எப்போது நடந்தது என்ற விவரங்கள் தெரியவில்லை. ஆனால், சிறுமியிடம் அந்த நபர் செல்போனை பறிக்க முயல்கிறார். ஆனால், சிறுமியோ, கெட்டியாக செல்போனை பிடித்து கொண்டு, ‘அம்மா, என் போன்... என் போனை எடுக்கறாங்க என்று கத்தி கூச்சலிடுகிறாள்.. ஆனாலும் அந்த நபர் செல்போனை பறித்து கொண்டு, மின்னல் வேகத்தில் மறைந்துவிடுகிறார். இந்த வீடியோதான் இணையத்தில் பரவி வருகிறது.

03.10.2024 அன்று ஒரு சம்பவம் நடந்து உத்தரப்பிரதேச மாநிலத்தை அதிர வைத்து வருகிறது.. உத்தரப்பிரதேசம் முரி எக்ஸ்ப்ரஸ் ரயிலில் S 4 மற்றும் S 5 பெட்டிகளில் உள்ள கழிவறைகளில் இருந்து வினோதமான சத்தம் கேட்டிருக்கிறது.. எனவே, பயணிகள் அங்கிருந்த போலீசாருக்கு தகவல் தந்து வரவழைத்துள்ளனர். பிறகு இந்த 2 பெட்டிகளில் நடத்தப்பட்ட தீவிர சோதனையில் ஏராளமான கஞ்சா பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டன.

**ரயில்வே போலீஸ்:**

தினமும் ரயில்வேயில் பலத்த பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வந்த போதிலும்கூட, எப்படி இந்த கஞ்சா பொட்டலங்கள் ரயிலுக்குள் வந்தன என்பது போலீசாரையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கிவிட்டதாம். இந்த கஞ்சா மதிப்பு ரூ. 12 லட்சம் வரை இருக்கும் என்கிறார்கள்.. எனவே, சிசிடிவி காட்சிகளை வைத்து குற்றவாளிகளை தேடி கொண்டிருக்கிறார்கள். இந்த சம்பவத்தை தொடர்ந்து, அனைத்து ரயில்களில் உள்ள கழிவறைகளிலும் சோதனை நடத்த போவதாகவும் அறிவித்துள்ளனர்.

- K.சுபுலட்சுமி




PROPSERV

Property Related Allied & Legal services

- REGISTRATION
- PATTA
- GIRAMA NATHAM
- CMDA APPROVAL
- BUILDING PLAN
- NAME TRANSFER
- SETTLEMENT
- LEGAL HEIR CERTIFICATE
- CORPORATION TAXES
- LAND CEILING
- SLUM BOARD
- HOUSING BOARD
- PROPERTY IDENTIFICATION
- DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com

# அனுமதியின்றி ‘NO PARKING’ பலகைகளை வைக்கக்கூடாது! காவல்துறை எச்சரிக்கை!

வீடுகள், நிறுவனங்கள் முன்பு, அரசின் அனுமதியின்றி ‘NO PARKING’ பலகைகளை வைக்க கூடாது என சென்னை காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் வீடுகளின் முன்பாக அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள ‘நோ-பார்க்கிங்’ போர்டுகளை அகற்றக்கோரி தொடரப்பட்ட வழக்கில், மாநகராட்சி மற்றும் போக்குவரத்து போலீஸார் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், வீடுகளின் முன்பு அனுமதியின்றி நோ பார்க்கிங் போர்டு வைத்திருப்பவர்கள் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதுடன், இதுகுறித்த விதிமுறைகளை பத்திரிகை, ஊடகம் மற்றும் இணையதளம் மூலம் விளம்பர படுத்தவும் காவல்துறைக்கு உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து, சென்னை மாநகர காவல்துறை முக்கிய அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. அதில், சென்னையில் இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில், எந்தவொரு தனிநபரோ, குடியிருப்பு சங்கமோ (அ) வணிக நிறுவனமோ, ‘NO PARKNG’ என்ற பலகைகள் அல்லது தடுப்புகளை முன் அனுமதியின்றி வைக்க கூடாது என்று அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை, குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்கள் “நோ பார்க்கிங்” சைன்போர்டுகள், மண் பைகள், தடுப்புகளை வைப்பது அதிகரித்து வருவதை கண்டறிந் துள்ளது மற்றும் முறையான அங்கீகாரம் இல்லாமல் பொது சாலைகளில் மற்ற தடைகள் இந்த நடைமுறையால் பொதுமக்களுக்கு பெரும் இடையூறு ஏற்படுவதுடன்,

பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு தேவையற்ற இடையூறு ஏற்படுகிறது. சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் முன் அனுமதியின்றி. “நோ பார்க்கிக் பலகைகள், தடுப்புகள் அல்லது இதுபோன்ற தடைகளை பொதுச் சாலைகளில் வைக்க எந்தவொரு தனிநபருக்கோ, குடியிருப்பு சங்கங்களுக்கோ அல்லது வணிக நிறுவனங்களுக்கோ அனுமதி இல்லை என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சாலையோரம் மற்றும் பொது இடங்களில் தனியார் வாகன நிறுத்தம் அல்லது பிற நோக்கங்களுக்காக




அனுமதியின்றி ஆக்கிரமிப்பது சட்டவிரோதமானது. மோட்டார் வாகனச் சட்டம் 1988ன் பிரிவு 116ன் படி, போக்குவரத்துப் பலகைகளை அமைக்க அரசு அதிகாரிகளுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. எனவே, உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, அனுமதியின்றி பலகைகள் அல்லது பொருட்களை வைத்து, பொதுச் சாலைகளுக்கு இடையூறாக செயல்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களுக்கான அறிவுறுத்தல்கள்:-

அனுமதிக்கப்படாத இடங்களில் வாக னங்கள் நிறுத்தப்படுவது குறித்து பொதுமக்கள் 103 அல்லது 100 என்ற எண்ணில் தகவல் தெரிவிக்கலாம். விதி மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படும்.

அங்கீகரிக்கப்படாத இடங்களில் நோ பார்க்கிங் பலகைகள், தடுப்புகள் மற்றும் பிற இடையூறுகளை வைத்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும்.

பொதுமக்கள் தங்கள் வாகனங்களை சாலைகளில் சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் நிறுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வாகன நிறுத்தம் தொடர்பான பலகைகளை வைப்பதற்கு முன், சரக போக்குவரத்து அதிகாரிகளிடம் இருந்து உரிய அனுமதிகளைப் பெற வேண்டும்.

சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை விதிமீறுபவர்களைக் கண்டறிந்து அபராதம் விதிக்க நகரம் முழுவதும் வழக்கமான சோதனைகளை மேற்கொள்ளும்.

இந்த விதிமுறைகளை கடைபிடிப்பதற்கும் மற்றும் சீரான போக்குவரத்தை உறுதி செய்வதற்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள் கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- J.தனசேகர்

# பள்ளிகளில் மாணவர் மகிழ்முற்றம்; குழு செயல்படுத்த அரசு உத்தரவு




தமிழகத்தில் அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களிடையே தலைமை பண்பை வளர்க்கும் வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் பெயர்களில், மாணவர் மகிழ்முற்றம் குழுக்கள் உருவாக்க பள்ளிக்கல்வி இயக்குனர் கண்ணப்பன் உத்தரவு பிறப்பித்துள்ளார். இது குறித்து பள்ளி கல்வி இயக்குனர் வெளியிட்டுள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கற்றல் திறன் மேம்பாடு, மாணவர்களின் பங்களிப்பு அதிகரிக்க, விடுப்பு எடுப்பதை குறைக்க, ஒற்றுமை கல்வியை ஊக்குவிக்க, அனைவருக்கும் வாய்ப்பு, நேர்மையான நடத்தை, தலைமைப் பண்பு, ஆசிரியர்-மாணவ உறவு ஆகியவற்றை மேம்படுத்துவதே இதன் நோக்கங்களாகும். மகிழ் முற்றம் அமைப்பு,பள்ளி தலைமையாசிரியர், மாணவர் குழு அமைப்பை வழி நடத்த வேண்டும். இக்குழுவில் பள்ளி மாணவ, மாணவி இருவர் குழு தலைவராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு வகுப்பு பிரிவிலும் குலுக்கல் முறையில் வகுப்பு தலைவர் தேர்வு செய்யப்பட வேண்டும். எமிஸ் தளத்தில் மாணவர் குழு அமைப்பு செயல்பாடுகளை உள்ளீடு செய்ய வேண்டும்.

அதற்கு புள்ளிகள் அடிப்படையில் வெற்றி குழுவாக அறிவிக்கப்படும்.மாணவ குழுக்கள் பெற்ற புள்ளிகளை கரும்பலகையில் தெரிவிக்க வேண்டும்.மாவட்ட அளவிலான வழிகாட்டுதல் குழு, மாவட்ட கலெக்டர் தலைமையில், முதன்மை கல்வி அலுவலர், உதவி திட்ட அலுவலர் வட்டாரக்கல்வி அலுவலர்கள் இருவர் உள்ளிட்டோர் அடங்கிய குழு மாவட்டம் தோறும் உருவாக்க வேண்டும்.

மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பின் செயல்பாடுகளை, தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் கருத்துக்களை ஆலோசனை நடத்தி, செயல்படுத்த உரிய வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும். இவ்வாறு அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- சரவணன் @ மணிகண்டன்,**

# வராகி அம்மன் வரலாறு மற்றும்மூல மந்திரம்

வராஹி மூல மந்திரம்

**ஓம் க்லீம் வராஹ முகி ஹ்ரீம் ஸித்தி ஸ்வரூபிணி ஸ்ரீம் தன வசங்கரி தனம் வர்ஷய ஸ்வாகா**

வராகி அம்மன் தோற்றம்

வராகமூர்த்தியின் சக்தி. கறுப்பு நிறமானவர். பன்றியின் முகத்தினை ஒத்த முகத்தினையும் பெரிய வயிற்றினையும் கொண்டிருப்பார். இவருக்கு ஆறு கரங்கள் காணப்படும். வலது கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும். மற்றையனவற்றில் தண்டம், வாள் என்பன இடம் பெற்றிருக்கும். இடது கரங்களில் ஒன்று அபய முத்திரையினைக் காட்ட மற்றையன கேடயம், பாத்திரம் என்பனவற்றினை ஏந்தியவாறு காணப்படும். இவர் எருமையை வாகனமாகக் கொண்டிருப்பார் என வராகியினைப்பற்றி ஸ்ரீ தத்துவநிதி விபரிக்கின்றது. தண்டநாத வராகி, சுவப்ன வராகி, சுத்த வராகி என்னும் மேலும் மூன்று வகையான வராகியின் உருவ அமைப்பு பற்றியும் இந்நூலில் கூறப்படுகின்றது.

தண்டநாத வராகி பொன்னிறமானவர். பன்றியின் முகத்தினை ஒத்த முகத்தைக் கொண்டிருப்பார். இவரது கரங்களில் சங்கு, சக்கரம், கலப்பை, உலக்கை, பாசம், அங்குசம், தண்டம் என்பன காணப்படும். இரு கரங்கள் அபய, வரத முத்திரையிலிருக்கும்.

சுவப்ன வராகி மேக நிறமானவர். மூன்று கண்களைக் கொண்டிருப்பார். பிறைச்சந்திரனைச் சூடியிருப்பார். வாள், கேடயம், பாசம், அரிவாள் என்பன கரங்களில் இடம்பெற்றிருக்கும். இரு கரங்கள் அபய, வரத முத்திரையிலிருக்கும்.

சுத்த வராகி நீல நிறமானவர். பன்றியின் முகத்தினை ஒத்த முகத்தினைக் கொண்டவர். வெண்மையான பற்கள் வெளியே நீட்டப்பட்டவாறிருக்கும். தலையில் பிறைச்சந்திரனைச் சூடியிருப்பார். சூலம், கபாலம், உலக்கை, நாகம் என்பன கரங்களிற் காணப்படும்.

வராஹி அம்மன் வழிபாடு

நம்முடைய வாழ்க்கையில் பல கஷ்டங்கள் நாம் செய்யும் செயல்களாலே ஏற்படுகிறது. இதனால் பல எதிரிகளின் தொல்லையினால் சிரமப்படுவார்கள். எதிரியின் தொல்லைகளால் அவதிப்படுபவர்கள் வராகி அம்மனை வழிபாடு செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

எதிரிகளை அழிப்பதற்கு வராஹி அம்மன் ருத்ர அவதாரம் எடுப்பாள். எதிரியின் தொல்லை நீங்குவதற்கு வராஹி அம்மனின் மூல மந்திரத்தை



26 நாட்கள் சொல்லி வழிபாடு செய்து வந்தால் வராகி அம்மனுடைய மொத்த அருளும் உங்களுக்கு கிடைக்கும்.

பூஜை அறை வழிபாட்டு முறை

வராஹி அம்மனை வழிபடுபவர்கள் வெள்ளை மொச்சை பருப்பை நன்றாக வேக வைத்து அதனுடன் தேன் மற்றும் நெய் கலந்து நைவேத்தியமாக படைத்து வராகி அம்மனை வழிபாடு செய்து வர வேண்டும்.

இந்த வழிபாட்டினை தினமும் செய்து வந்தால் எதிரிகளின் தொல்லை நீங்கும், அதோடு தன வசியம் பெருகும். தொழில் விருத்தி அடைந்து நல்ல செழிப்பாக இருக்கும்.

சகலவித பயங்களும் நீங்க வாராஹி மந்திரம்

**ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் வாராஹி தேவியை நமஹ ஓம் ஹ்ரீம் பயங்கரி அதிபயங்கரி ஆச்சர்ய பயங்கரி சர்வஜன பயங்கரி ஸர்வபூத பிரேத பிசாச பயங்கரி ஸர்வ பயம் நிவாரய சாந்திர்பவதுமே ஸதா.**

- ராதிகா.S

# ஐசிஎஃப்ஏ-வும் ரோபார் ஐஐடி-யும் இணைந்து இந்திய டிஜிட்டல் வேளாண் மாநாட்டை புதுதில்லியில் நடத்தின






ஐசிஎஃப்ஏ-வும் ரோபார் ஐஐடி-யும் (ICFA, IIT Ropar TIF – AwaDH) இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்திய டிஜிட்டல் வேளாண் மாநாடு - 2024 புதுதில்லியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற வேளாண் - விவசாயிகள் நலத்துறை செயலாளர் டாக்டர் தேவேஷ் சதுர்வேதி டிஜிட்டல் வேளாண் இயக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இந்திய விவசாயத்தை நவீனமயமாக்க தொழில்நுட்பம், தரவு சார்ந்த தீர்வுகளை மேம்படுத்துவதில் இந்த இயக்கத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். உடனடி தகவல்களுடன் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பது, சிறந்த முடிவெடுப்பதை செயல்படுத்துவது, கிராமப்புற வாழ்வாதாரத்தை அதிகரிப்பது ஆகியவை இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இந்தியாவின் வேளாண் சூழலைச் சிறப்பாக மாற்றுவதில் டிஜிட்டல் வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கும் என்று திரு சதுர்வேதி கூறினார்.

தொடக்க அமர்வில், இந்திய உணவு - விவசாய சம்மேளனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு அஸ்வனி பக்ஷி மதிப்பிற்குரிய விருந்தினர்கள், பிரமுகர்களை வரவேற்றார். இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த உதவிய அனைவருக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த நாள் நிகழ்வு பாரம்பரிய விவசாய முறைகளில் புரட்சியை ஏற்படுத்துவதற்கான விவாதங்களை உள்ளடக்கியது. அதிநவீன தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதன் மூலமும், விவசாயிகள், தொழில்நுட்பத் துறையினர், ஆராய்ச்சியாளர்களிடையே ஒத்துழைப்பை ஊக்குவிப்பதன் மூலமும், டிஜிட்டல் கருவிகள் மூலம் நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பருவநிலை-நெகிழ்திறன் விவசாய அமைப்புகளை உருவாக்குவதன் மூலமும் புதுமைகளை ஊக்குவிப்பதற்கான விவாதங்களை இது உள்ளடக்கியதாக அமைந்தது. டிஜிட்டல் விவசாயத்தின் திறனை ஆராய இந்த நிகழ்வு ஒரு முக்கிய தளமாக செயல்பட்டது. இந்த மாநாடு அறிவு பரிமாற்றத்தை வளர்ப்பது, அதிநவீன கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்துவது மற்றும் துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டது. கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், தொழில்முனைவோர், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விவசாயிகளை ஒன்றிணைப்பதன் மூலம், இந்த நிகழ்வு டிஜிட்டல் சகாப்தத்தில் விவசாயத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் வழியைக் காட்டியுள்ளது.

- இளைய தர்ஷினி

# மழையை சிறப்பாக சமாளிக்கும் தமிழக அரசு! புகழ்தஆளுநர் ஆர்.என்.ரவி


பருவ மழையை சமாளிக்க தமிழக அரசு அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், அனைத்து விதமான சாத்தியமான வழிகளை அரசு செய்து வருகிறது என தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கி இருக்கும் நிலையில் நேற்று முதல் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ் சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் நல்ல மழை பெய்து வருகிறது. குறிப்பாக சென்னை மாநகர், புறநகர் பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக சென்னை புறநகர் பகுதிகளான மேடவாக்கம், பள்ளிக்கரணை, குரோம்பேட்டை ,வேளச்சேரி, நெற்குன்றம், தாம்பரம் ஆகிய பகுதிகளில் பலத்த இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது.

இதே போல சென்னையின் அண்ணா சாலை, தி நகர், சைதாப்பேட்டை, கிண்டி, திருவல்லிக்கேணி, அசோக் நகர், ஜாஃபர்கான் பேட்டை, சேப்பாக்கம், ராயப்பேட்டை, எழும்பூர் உள்ளிட்ட பகுதிகளில்பலக்க காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. தொடர்ந்து பலத்த காற்றுடன் பெய்து வரும் மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி உள்ளது.

அதே நேரத்தில் மழை நீரை வெளியேற்றுவதற்காக சென்னை மாநகராட்சி



ஊழியர்களும் தயார் நிலையில் இருக்கின்றனர். வேளச்சேரி, பள்ளிக்கரணை உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் முழங்கால் அளவு சாலைகளில்

வெள்ளம் தேங்கி இருக்கும் நிலையில் வாகன போக்குவரத்து முடங்கி இருக்கிறது. இதை அடுத்து தேங்கி இருக்கும் மழை நீரை வெளியேற்றும் பணியானது நடைபெற்று வருகிறது. மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை மேயர் பிரியா உள்ளிட்டோரும் அதிகாரிகளும் மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு அதனை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அது மட்டும் அல்லாமல் நகரின் பல்வேறு பகுதிகளில் மின் மோட்டார்கள் மூலம் தண்ணீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பருவ மழையை சமாளிக்க தமிழக அரசு அனைத்து விதமான



முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், அனைத்து விதமான சாத்தியமான வழிகளை அரசு செய்து வருகிறது என தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி பாராட்டு தெரிவித்துள்ளார். சேலம் மாவட்டம் மேச்சேரியில் நெசவாளர்களுக்கு விருது வழங்கும் விழா மற்றும் நெசவாளர் குடும்பத்தினரை சந்திக்கும் நிகழ்வு என பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர்," மேச்சேரியில் நெசவாளர்களை சந்தித்தது மறக்க முடியாத அனுபவமாக அமைந்துள்ளது. நெசவாளர்கள் மீது பிரதமர் மோடி நெசவாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ளார். நெசவாளர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு காணப்படும். கைத்தறி நெசவாளர்களின் திறமை மிகவும் வியப்பளிக்கிறது" என்றார்.

தொடர்ந்து சென்னை மழை பாதிப்புகள் குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த ஆளுநர் ஆர்.என்.ரவி," வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்ததை விட அதிமாக பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதற்கேற்ற வகையில் அரசு தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளது. இன்று காலை மழை தொடங்கியுள்ளது. தற்போது அதிமாக பெய்து வருகிறது. எதிர்பார்த்ததை போல அடுத்த 2 நாளுக்கு மழைப் பொழிவு இருக்கும் என நினைக்கிறேன். அனைத்து விதமான சாத்தியமான வழிகளை அரசு செய்து வருகிறது. மழைப் பாதிப்புகளை அரசு உரிய முறையில் கையாளும் என நம்புகிறேன்" என்று கூறினார்.

- P.கார்த்திகேயன்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
8754582123



# திருப்பதி லட்டு சர்ச்சை

## உச்சநீதிமன்றம் சொன்னது என்ன?

மத்திய புலனாய்வு அமைப்பான (சி.பி.ஐ) இயக்குனரால் கண்காணிக்கப்படும் புதிய “சுயாதீனமான” சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி), முந்தைய ஒய்.எஸ்.ஆர்.சி.பி அரசில் ஆந்திரப் பிரதேசத்தின் திருப்பதியில் உள்ள திருமலை வெங்கடேஸ்வரா கோவிலில் விநியோகிக்கப்படும் லட்டுகளில் கலப்பட நெய் பயன்படுத்தப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

புதிய எஸ்.ஐ.டி குழுவில் சி.பி.ஐ மற்றும் ஆந்திரப் பிரதேச மாநில காவல்துறையைச் சேர்ந்த தலா 2 அதிகாரிகளும், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (எஃப்.எஸ்.எஸ்.ஏ.ஐ) மூத்த அதிகாரி ஒருவரும் இடம் பெறுவார்கள் என்று நீதிபதிகள் பி.ஆர். கவாய் மற்றும் கே.வி. விஸ்வநாதன் அமர்வு தெரிவித்துள்ளது.

‘சி.பி.ஐ இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் விசாரணை நடத்தப்படுவது பொருத்தமாக இருக்கும்... எனவே பின்வரும் வழிகாட்டுதலின்படி இந்த மனுவை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம். மாநில அரசால் நியமிக்கப்பட்ட எஸ்.ஐ.டி கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளது. சி.பி.ஐ இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட சி.பி.ஐ-யின் இரண்டு அதிகாரிகள், ஆந்திரப் பிரதேச அரசால் பரிந்துரைக்கப்பட்ட ஆந்திரப் பிரதேச மாநில காவல்துறையின் இரண்டு அதிகாரிகள், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (எஃப்,எஸ்.எஸ்.ஏ.ஐ) தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட மூத்த அதிகாரி ஒருவர்’ என்று நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டனர்.

புதிய எஸ்.ஐ.டி-யின் விசாரணைக்கு உத்தரவிட்டு உச்ச நீதிமன்ற நீதிபதிகள்

# 'நீதிமன்றத்தை அரசியல் போர்க்களமாக பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம்':

# சுப்ரீம் கோர்ட்

அமர்வு, மனுக்களில் அல்லது பிரதிவாதியின் நிலைப்பாட்டில் குற்றச்சாட்டுகள் மற்றும் எதிர் குற்றச்சாட்டுகளுக்கு செல்லவில்லை என்று தெளிவுபடுத்தியது. 'நீதிமன்றத்தை ஒரு அரசியல் போர்க்களமாக பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். இருப்பினும், கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளைத் தணிக்க, சுதந்திரமான எஸ்.ஐ.டி மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் பார்க்கிறோம்' என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு கூறியது.

ஆந்திராவில் ஆளும் தெலுங்கு தேசம் கட்சி (டி.டி.பி) தலைமையிலான அரசாங்கம் திருப்பதி லட்டுவில் பயன்படுத்தப்படும் பொருட்களின் தூய்மை குறித்து சந்தேகம் எழுப்பியதால் சர்ச்சை தொடங்கியது. திருப்பதி கோயில் பக்தர்களுக்கு தினமும் வினியோகம் செய்வதற்கு முன்பு கடவுளுக்கு வழங்கப்படும் லட்டுகளில் விலங்குகள் மற்றும் காய்கறிகளின் கொழுப்பு கலந்திருப்பதாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆய்வக அறிக்கைகளை பொதுவில் வெளியிட்டார்.

செப்டம்பர் 30-ம் தேதி இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், மாநில அரசின் குற்றச்சாட்டுகள் மீதான விசாரணையை சுதந்திரமான விசாரனை அமைப்புக்கு மாற்ற வேண்டுமா என்று மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவிடம் கேட்டது.

துஷார் மேத்தா வெள்ளிகிழமை நீதிமன்ற அமர்விடம் கூறினார், 'நான் பிரச்சினையை ஆய்வு செய்தேன். ஒன்று மிகத் தெளிவாக உள்ளது. இந்த குற்றச்சாட்டில் உண்மையின் கூறு ஏதேனும் இருந்தால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது... பக்தர்கள் உலகம் முழுவதும் பரவி உள்ளனர். உணவுப்



பாதுகாப்புச் சட்டமும் சம்பந்தப்பட்டது... எஸ்.ஐ.டி உறுப்பினர்களுக்கு எதிராக நான் எதையும் கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் தங்கள் வேலையைச் செய்யத் தகுதியும் திறனும் உடையவர்கள். எஸ்.ஐ.டி உறுப்பினர்களை விட மூத்த மத்திய அரசின் காவல்துறையின் சில மூத்த அதிகாரி அவர்களைக் கண்காணிக்கட்டும். அகில இந்தியக் கண்ணோட்டம் இருக்கும்... அது நம்பிக்கையைத் தூண்டும், விசாரணை தொடரும் என்று நான் நினைக்கிறேன்.' என்று கூறினார்.

- K.ரமேஷ்குமார்

# உலக சாதனை படைத்த சென்னை விமான சாகச நிகழ்ச்சி





இந்திய விமானப் படை தொடங்கப்பட்டு 92-வது ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில், 06.10.2024 அன்று காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை 2 மணி நேரம் பிரமாண்ட விமான சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதற்கு முன்பாக 2003ம் ஆண்டு சென்னையில் விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. தற்போது 21 ஆண்டுகள் கழித்து 2024ம் ஆண்டு சென்னை விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

விமானப் படையின் ஆகாஷ் கங்கா அணி, சூர்யகிரண் ஏரோபாட்டிக் அணி, சாரங் ஹெலிகாப்டர்கள், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நவீன இலகு ரக விமானமான தேஜஸ், இலகுரக போர் ஹெலிகாப்டர் பிரசாந்த் மற்றும் 1971-ம் ஆண்டு வங்கதேசத்துக்கு எதிரான போரில் பயன்படுத்தப்பட்ட டகோட்டா மற்றும் ஹார்வர்ட் ஆகிய பழங்காலத்து விமானங்களும், அதிநவீன போர் விமானமான ரஃபேல் விமானம் உள்ளிட்ட 72 விமானங்கள் இந்த சாகச நிகழ்ச்சியில் பங்கேற்றன.

இதனை காண்பதற்காக காலை 7 மணி முதலே மக்கள் கூட்டம் சென்னை மெரினாவை நோக்கி படையெடுக்க துவங்கியது. பள்ளி விடுமுறை தினம் என்பதால் அதிகப்படியான மக்கள் வர வாய்ப்பு இருக்கிறது என முன்கூட்டியே கணிக்கப்பட்டிருந்தது. மேலும், விமான சாகச நிகழ்ச்சியைக் காண 15 லட்சம் அளவிலான மக்கள் வருவார்கள் என கணிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சென்னை மெரினாவில் நடந்த விமான சாகச நிகழ்ச்சியைக் காண 15 லட்சத்திற்கும் அதிகமானோர் வந்ததாக சொல்லப்படுகிறது. குறிப்பாக மெரினா கடற்கரை பகுதியில் மட்டுமே 4 லட்சம் பேர் கூடி விமான சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்ததாக கணிக்கப்பட்டுள்ளது. அதேபோல், மெரினாவை ஒட்டியுள்ள பட்டினம்பாக்கம் போன்ற கடற்கரையிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது. எனவே அந்தப் பகுதியில் எல்லாம் சுமார் 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் விமான சாகச நிகழ்ச்சியை பார்வையிட்டனர் என கணிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி, தெற்கில் கோவளம் முதல், வடக்கில் எண்ணூர் வரை கடற்கரைகளிலும், கட்டடங்களின் மொட்டை மாடிகளிலும் அதிகப்படியான மக்கள் சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்துள்ளனர். இதனால், மொத்தமாக 15 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்த விமான சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்திருப்பது தெரியவந்துள்ளது.

இதன் மூலம், உலகிலேயே போர் விமான சாகச நிகழ்ச்சியை அதிகளவிலான மக்கள் கண்டுகளித்தது சென்னையில் தான் என லிம்கா புக் ஆஃப் ரிக்கார்ட்ஸ் தனது சாதனை புத்தகத்தில் பதிவு செய்துள்ளது.

**- வீ.அய்யனார்**


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
ROYAL ENFIELD
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine
Re - work
High Quality
MOTUL
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect
Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

**PENA KURAL,** Tamil Monthly - October 2024
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

| Owned, Printed and Published by: | Printed at: | Published at: | Editor: |
|---|---|---|---|
| **NV SIVASHANKAR** | **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | **RATHIKA S** |